விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 20 வியாழக்கிழமை (05.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

ரா ம் கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலுவான நிலையில் புலிகள்; கோத்தபாய அறிவிப்பு!



(கொழும்பு), தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் வலுவான நிலையில் காணப்படுகின்றது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள், புலி ஆதரவாளர்கள், புலி அனுதாபிகள் உள்ளிட்ட தரப்பினர் தொடர்ச்சியாக பல்வேறு வழிகளில் பல்வேறு நாடுகளில் இயங்கி வருவதாகவும் பாதுகாப்புச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகக் கட்டமைப்பில் இணைந்து கொண்டவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஆயுததாரிகள் எனப் பல்வேறு போர்வையில்புலி ஆதரவாளர்கள் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.


தொழில்சார் நிபுணர்கள் ஒன்றிய ஒன்றுகூடல் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பிடம் பாரியளவில் நிதி காணப்படுகிறது.

வெளிநாடுகளின் வலுவான சக்திகளுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்பு உள்ளது. சில சர்வதேச ஊடகங்கள் புலிகளின் பிரசார நிறுவனங்களாக மாற்றமடைந்துள்ளன. குறிப்பாக சனல் 4 மற்றும் அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்ற ஊடக நிறுவனங்கள் ஒருபக்க சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்காக பிரசாரங்களில் இறங்கியுள்ளன.

இலங்கை சமாதானத்தின் அனுகூலங்களை அனுபவித்துவரும் நாடுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில், ஆசியாவின் முதனிலை நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்றும் பணியில் தொழில்சார் நிபுணர்களுக்கு விசேட பொறுப்பு காணப்படுகின்றது. (20ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த பிரிட்டன் எம்.பிகள், வட மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## த.தே.கூ.வின் தூதுக்குழு தென்னாபிரிக்கா பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற தூதுக்குழு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தென்னாபிரிக்காவிற்கு பயணமானது.

அந்நாட்டின் ஆளும் கட்சியான தென்னாபிரிக்க காங்கிரசின் 100-வது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிடைத்த அழைப்பை ஏற்று இத் தூதுக் குழு தென்னாபிரிக்காவின் தலைநகர் டர்பனுக்கு பயணமாகியுள்ளது.

இத் தூதுக்குழுவிற்கு கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தலைமை வகிக்கிறார். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்வரும் 10-ம்திகதியளவில் மேற்படி தூதுக்குழு கொழும்பு திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-5)

## மலசலகூடங்களும் கணக்கெடுப்பு

நாடளாவிய ரீதியிலான சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் மூன்றாவது கட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளது. இதன்போது, வீட்டிலுள்ளோரின் எண்ணிக்கை, சொத்துக்களை அனுபவிக்கும் காலம், குடிநீர், மின்சாரம், சமையல் எரிபொருள், மலசல கூட வசதிகள், இணைய போன்ற தொடர்பு சாதன (19ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியசாலைக் கட்டிடம் திடீரென இடிந்து விழுந்தது

### தெய்வாதீனமாக தப்பியது பச்சிளம் குழந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 22ஆம் இலக்க பிரசவ விடுதியில் திடீரென சுவர் ஒன்று இடிந்து விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றிரவு 7.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. தாயும் பச்சிளம் குழந்தையும் கட்டிலில் இருந்து எழுந்து சென்ற சில விநாடிகளிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சுவர் விழுந்ததால் கட்டில் இரண்டு பாகமாக முறிந்தது. குழந்தை அழுததைத் தொடர்ந்து தாயும் குழந்தையின் பேர்த்தியாரும் குழந்தையை தூக்கிச் சென்றுள்ளனர். அவ்வேளையே சுவர் இடிந்து விழுந்துள்ளது.

இதனால் தெய்வாதீனமாக அவர்கள் தப்பினர். இச்சம்பவத்தினையடுத்து ஏனையவர்கள் பீதியுடன் காணப்பட்டனர்.

சுவர் இடிந்த சில மணிநேரத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதுடன் விசாரணைக்கும் உத்தரவிட்டனர். (எ-11)

## கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

செவ்வாய்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாக கூறப்படும் நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை காலை கிராண்ட்பாஸிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கிராண்ட்பாஸ் பேர்குசன் வீதியில் இச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன கூறினார்.

இந்நபர் 26 வயதான தினேஸ் புத்திக என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் போதைப்பொருள் வர்த்தகரான சங்கர் என்பவருடன் இணைந்து செயற்பட்டதாக கூறப்படுகிறது.

தினேஸ் புத்திக கடத்தப்பட்டமை குறித்து அவரின் தாயார் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். நேற்று அவர் சடலத்தை அடையாளம் காட்டினார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

கடந்த வாரம் முகத்துவாரம் பகுதியில் வைத்து கடத்தப்பட்ட மீன் வியாபாரி ஒருவர் மறுநாள் சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பொன்சேகாவின் விடுதலையை குழப்பும் எதிர்க் கட்சிகள்!

### டிரான் அலஸ் எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் படைத்தளபதியும், ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவருமான சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை எதிர்க் கட்சி அரசியல்வாதிகள் சிலரே குழப்பியதாக ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

சரத் பொன்சேகா வெளியே வந்து அரசியலில் இறங்கினால் தமது ஆதரவுத்தளம் பாதிக்கப்படலாம் என அஞ்சும் எதிரணி அரசியல்வாதிகள் சிலர்தான் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் சிங்கள மொழி மூலமான தனியார் வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் நேற்று புதன்கிழமை அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் படைத் தளபதியின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கடந்த சில மாதங்களாகத் தான் பேச்சுக்களை நடத்தியதை சரத் பொன்சேகாவின் குடும்பத்தினர் தெரிந்திருந்தனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், சரத் பொன்சேகாவை விடுவிக்க வேண்டுமானால் அவரது குடும்பத்தினரே தன்னுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என ஜனாதிபதி தன்னிடம் உறுதியாக கூறி (19ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற ஆதாரத்தை ஐ.நாவிடமிருந்து பெறத் திட்டம்

(கொழும்பு)

உள்ளக விசாரணைகளுக்குத் தேவை எனக் கூறி, ஐ.நாவிடம் உள்ள போர்க் குற்றச் சாட்சியங்கள், ஆதாரங்களை அறிந்து கொள்ளும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் அடிப்படையில் இராணுவத்தினாலும் விடுதலைப் புலிகளாலும் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான வாய்மூல மற்றும் எழுத்து மூல சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறு ஐ.நாவிடம் இலங்கை அரசு கோரவுள்ளதாக கொழும்பு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் மீறல்கள் தொடர்பாக உள்ளக விசாரணைக்கு போர்க் குற்றங்கள் பற்றி சாட்சியங்கள் அவசியமானவை என்று அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த போர்க் குற்றச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஐ.நா. விதித்துள்ள தடை இலங்கையின் விசாரணைகளுக்கு தடையாக அமையக்கூடாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் அரசியல் மற்றும் (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முல்லை. பிரச்சினை தொடர்பில் உச்ச நீதிமன்றிற்கு ஆலோசனை சொல்ல குழு நியமனம்

(புதுடில்லி)

முல்லைப்பெரியாறுஅணை பிரச்சினை குறித்து உச்ச நீதி மன்றிற்குஆலோசனைசொல்ல இந் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான குழு ஒன்றை நீதிமன்றம் நிய மித்துள்ளது.

நீதிபதி ஆனந்த் தலை மையிலான குழுவினர் டில்லி யில் அண்மையில் கூடி ஆலோசனை நடத்தினார் கள்.

இதற்கு தமிழக அரசு சார் பில் முல்லைப்பெரியாறுஅணை வலுவாக உள்ளது. நிலநடுக் கத்தால் அணைக்கு எந்த பாதி ப்பும் ஏற்படாது என்று தெரி விக்கப்பட்டது. இதற்கிடையே நிலநடுக்கங்களால் முல்லைப் பெரியாறு அணைக்கு பாதி ப்பு ஏற்பட்டதா? என்று ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட தத்தே மேத்தா குழுவினர் அறிக்கை குறித்து விவாதிக்க நீதிபதி ஆனந்த் தலைமையிலான குழு நேற்று முன்தினம் 2 ஆவது நாளாக கூடியது.

நீண்ட விவாதத்துக்கு பின்னர் நீதிபதி ஆனந்த் தலை மையிலான குழுவினர் பிறப் பித்த உத்தரவு வருமாறு, 1979 ஆம் ஆண்டு முதல் முல்லைப்பெரியாறு அணை யில் 136 அடிக்கு தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு வருகி றது. அதனால் எந்த பாதிப் பும் ஏற்பட்டதாக தெரியவி ல்லை. முல்லைப்பெரியாறு அணை மிகவும் வலுவான தாக உள்ளது. நிலநடுக்கங் களால் அணைக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று தொழில்நுட்ப குழுவின் அறி க்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

2010 ஆம் ஆண்டு மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத் தரவில் அணையின் தற்போ தைய நிலையே தொடரவே ண்டும் என்று கூறியுள்ளது. மேல் நீதிமன்றம் உத்தரவை நாங்கள் மீற முடியாது. எனவே, அணையின் நீர்மட்டத்தை 120 அடியாக குறைக்க உத் தரவிட முடியாது. தற்போ தைய நிலையே நீடிக்க வேண் டும் என உத்தரவில் கூறப் பட்டுள்ளது.

தனது இறுதி அறிக்கை யை அடுத்த மாத இறுதியில் உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யவும் அதை இறுதி செய் வதற்காக எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் மீண்டும் கூட வும் ஆனந்த் குழு முடிவு செய் துள்ளது. (அ-2)

# பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள பாரதம் வரவுள்ள வங்கதேச பிரதமர்

(சென்னை)

திரிபுராவில் நடைபெறவு ள்ள மத்திய பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கல ந்து கொள்வதற்காக வங்கதேச பிரதமர் ஷேக் ஹசினா இந் தியா வரவுள்ளார்

திரிபுரா மாநிலத்தில் உள்ள மத்திய பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள் ளது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள வங்கதேச பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட வங்கதேச பிரதமர் எதிர்வரும் 11 ஆம் திகதி இந்தியாவிற்கு வருகை தரவுள்ளார். இவ் விழாவில் ராஜ்யசபா தலை வரும் துணை ஜனாதிபதியு மான ஹமீத் அன்சாரியும் கல ந்துகொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் பிரதமர் ஷேக் ஹசீனாவிற்கு கௌரவ முனை வர் பட்டம் வழங்கப்படவுள்ள தாக கூறப்படுகிறது.

மேலும் வங்கதேச பிரத மர் ஒருவர் திரிபுரா மாநிலம் வருகை தருவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சமையல் சிலிண்டர் வெடித்ததில் — கட்டடம் இடிந்து வீழ்ந்தது —

## 5 பேர் பலி; 4 பேர் படுகாயம்



(புதுடில்லி)

வடமேற்கு டில்லியிலுள்ள முந்த்கா பகுதியில் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் 5 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதி புகையிரதக் காலனியில் சில தொழிலா ளர்கள் சமையலில் ஈடுபட் டிருந்தனர். அப்போது சமை யல் சிலிண்டர் வெடித்ததில் மேல் கூரை தகர்ந்து கட்டடம் இடிந்தது.

பாதிக்கப்பட்டவர்கள் உடனே அருகில் உள்ள வைத் தியசாலைக்குக் கொண்டுசெல் லப்பட்டதில் 5 பேர் ஏற்க னவே இறந்தது தெரியவந் தது. காயமடைந்தவர்களு க்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (அ-2)

# பாரதச் செய்திகள்

# காஷ்மீர் மீது தாக்குதல் நடத்த பெண்களுக்கு தீவிரவாத பயிற்சி



காஷ்மீர் மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் தீவிரவாத அமைப்பானலஷ்கர்இதொய்பா பெண்களுக்கு பயிற்சி அளி த்து வருவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் லஷ்கர் இதொய்பா இயக்கத்தில் 21 பெண்களுக்கு தீவிரவாத பயி ற்சி அளிக்கப்பட்டு வருவதாக இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தெரிவித்து ள்ளார்.

மேலும் இது உண்மை தகவல் என்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு பகுதியான முசா பராபாத் நகரில் மேற்படி இய க்கத்தினர் பெண்களுக்கு தீவி ரவாத பயிற்சி அளித்து வரு வதாகவும் அவர் தெரிவித்து ள்ளார். காஷ்மீர் பகுதியில் தாக்குதல் நடத்துவதற்கு இந்த குழுக்களுக்கு தக்தரீன் இ தொய்பா என புதிய பெயரி டப்பட்டுள்ளது என்று அந்த இராணுவ அதிகாரி தெரிவித் துள்ளார்.

காஷ்மீரை இந்தியாவிலி ருந்து விடுதலை செய்து பாகி ஸ்தானுடன் இணைப்பது இந்த அமைப்பின் முக்கிய நோக்க மாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-2)

# சீன வர்த்தகர்களின் கோபம் தணியும் வரை வர்த்தக மையங்களுக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம்

## இந்திய தூதரகம்

(பெய்ஜிங்)


சீனாவில் இந்திய தூதர் உட்பட 3 பேர் மீதான தாக்கு தலை அடுத்து அந்நாட்டுவர்த் தகமையத்துக்கு இந்தியர்கள் செல்ல வேண்டாம் என இந் திய தூதரகம் எச்சரிக்கை விடு த்துள்ளது.

ஸெஜியாங் மாகாணத் தில் உள்ள இவு ஒரு வர்த்தக நகரம். 100 இற்கும் மேற்பட்ட இந்திய வர்த்தகர்கள் இங்கு வசித்து வருகின்றனர். கோடிக் கணக்கில் வர்த்தகம் செய் கின்றனர்.

இந்நிலையில் ஈரோ குளோ பல் டிரேடிங் என்ற கம்பனி யில் வேலை செய்த 2 இந் தியர்களை கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி சீன வர்த்த கர்கள் கடத்திச் சென்று தாக்கி யதுடன் பொலிஸில் ஒப்படை த்துள்ளனர். கம்பனி முத லாளி திடீரென ஓடி விட்டதை யடுத்து இவர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக கூறப்படுகி றது.

தகவல் அறிந்த இந்திய தூதரகத்தின் துணை தூதர் பாலச்சந்திரன் அங்குள்ள நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் தார். விசாரணை நடந்து கடை சியில் தீபக் மற்றும் ஷியாம் சுந்தரை நீதிபதி விடுவிக்க உத்தரவிட்டார். அவர்களுடன் பாலச்சந்திரன் கிளம்பிய போது ஆத்தரமடைந்த வியா பாரிகள் மூவரையும் கடுமை யாக தாக்கினர்.

இதுதொடர்பாக இந்திய தூர்தரகம் தனது இணையத் தளத்தில் வெளியிட்ட அறிக் கையில் சீன வர்த்தகர்கள் இந்தியர்கள் மீது கோபத்தில் உள்ளதால்இவுபகுதிக்குசெல்ல வேண்டாம் என்றும் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்குமா றும் இந்திய வர்த்தகர்கள் கேட் டுக் கொள்ளப்படுகிறார்கள் என கூறப்பட்டுள்ளது. (அ-2)




மும்பை இந்து மில் பகுதியில் அம்பேத்கரின் நினைவிடம் அமைப்பதற்கு மத்திய அரசு இடம் வழங்க முடிவு செய்ததைக் கொண்டாடும் வகையில் காங்கிரசார் பட்டாசு வெடித்து மகிழ்ந்ததைப் படத்தில் காணலாம்.

# தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிதியுதவிக்காக மத்திய அரசை வலியுறுத்துவேன்

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)



தானே புயலால் பாதிக்க ப்பட்ட தமிழகத்துக்கு தேவை யான நிதியுதவியை வழங் குமாறு மத்திய அரசை தாம் வலியுறுத்தவுள்ளதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறி னார்.

அண்மையில் தாக்கிய தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், புதுச்சேரி, சிதம்பரம் உள்ளிட்ட பகுதிகளை நேரில் சென்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று பார்வை யிட்டார்.

முன்னதாக சென்னை யில் நிருபர்களிடம் கருணா நிதி கூறுகையில், தமிழக அரசின் நிவாரணப் பணிகள் குறித்து மக்கள் அதிருப் தியு டன் உள்ளனர்.

மாநில அரசுக்கு தேவையான நிதி உதவிகளை வழங்குமாறு மத்திய அரசை தி.மு.க. வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளும் என்றார்.

அதனைத் தொடர்ந்து புதுச்சேரியில் புயல் சேதங் களை பார்வையிட்ட அவர் புயலால் பாதிக்கப்பட்ட புதுச் சேரி, கடலூர் மாவட்டங்களு க்கு தி.மு.க. அறக்கட்டளை சார்பாக ரூபா 50 இலட்சம் நிவாரண உதவி வழங்கப் படும் எனவும் அறிவித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உலங்கு வானூ ர்தியின் மூலம் முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று சென்று பார்யையிட்டுள்ளார். கடலூரில் நிவாரண உதவிகளை நேரில் வழங்கியும் உள்ளார்.

புயல் நிவாரணப்பணி க்கு மேலும் 700 கோடி ரூபாய் ஒதுக்கீட்டை முதலமைச்சர் வழங்க உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# ஜே.வி.பி. அதிருப்திக் குழுவினரின் மாற்றத்துக்கான இளைஞர் இயக்கம்

(கொழும்பு)

இந்த நாட்டின் இளந் தலைமுறையினரின் இழந்துபோன உரிமைகளை வென்றெடுப்பதற்கான இளைஞர் போராட்டத்தை நடத்தவென மாற்றத்துக்கான இளைஞர்கள் என்ற பெயரில் தமக்கென ஒரு இளைஞர் இயக்கத்தை தொடங்கவுள்ளதாக ஜே.வி.பியிலிருந்து பிரிந்த அதிருப்தியாளர்குழு அறிவித்துள்ளது.

உரிமைகளை இழந்து நிற்கும் தலைமுறை என இன்றைய இலங்கையின் இளந்தலைமுறையினர் கருதப்படுகின்றனர்.

இதற்கு முடிபுகட்டுவதே எமது நோக்கம் என மாற்றத்துக்கான இளைஞர் இயக்க த்தின் ஏற்பாட்டாளரான வருண தீப்த ராஜபக்ஷ செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

சுற்றாடல், மனித உரிமைகள், கலைகள், விளையாட்டு ஆகிய துறைகளில் இந்த இயக்கம் கவனம் செலுத்தும். அத்துடன் நவதாராள பொருளாதார முறைக்கு எதிரான போராட்டத்தையும்இந்த இயக்கம் நடத்தும்.

வேலையின்மை, இளைஞர்கள் தற்கொலை புரிதல் என்னும் பிரச்சினைகளுக்கு எதிராகவும் இந்த இயக்கம் போராடும்.

நாள் ஒன்றில் பத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் தற்கொலை புரிகின்றனர். கடந்த 15 வருடங்களில் 83 ஆயிரம் இளைஞர்கள் தற்கொலை செய்துள்ளனர். 70 சதவீதமான இளைஞர்கள் தமது பெற்றோரில் தங்கியுள்ளனர் என ராஜபக்ஷ கூறினார்.

இந்த இயக்கத்தை தொடக்கு முகமாக எதிர்வரும் 9-ம் திகதி கொழும்பு ஹைட்பாக்கிலிருந்து புதிய நகரசபை மண்டபம்வரை பேரணியொன்று இடம்பெறவுள்ளது என அவர் கூறினார். (எ-5)

# 21 வருடங்களின் பின்னர் பாடசாலை மீள ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுச மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் வித்தியாலயம் 21 வருடங்களின் பின்னர் நேற்று மீள ஆரம்பிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் இயங்காமல் கைவிடப்பட்ட இப் பாடசாலையை நேற்று உத்தியோ பூர்வமாக தீவகம் வலயக்கல்விப் பணிப்பாளர் இராதாகிருஷ்ணன் ஆரம்பித்து வைத்தார்.

இப் பாடசாலையின் அதிபராக புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றிய திருமதி யோகராணி விநாயகமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

## கண்காணிப்புக்குழுக்கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஜனவரி மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால்பிற்போடப்பட்டுள்ளதாக பிரதிப்பிராந்தியப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி சி. சிவராணி அறிவித்துள்ளார்.

இக் கூட்டம் நாளைநடைபெற விருந்தமைகுறிப்பிடத்தக்கது. (எ)


**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலி, பலாலி வீதியிலிருந்து சுமார் 300 யார் தொலைவில் கலைவாணி வீதியில் 4 பரப்பு 6.7 குளி காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0772985783
0773125192

(7231)


## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நாளை மறுதினம் 7-ம் திகதி சனிக்கிழமை தொடக்கம் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதே வேளை இப்பரீட்சை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்திய நிலையத்தில் நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் இடவசதியின்மை காரணமாக யாழ்பல்கலைக் கழகமண்டபங்களில்நடத்தத்திட்டமிடப் பட்டுள்ளதுனயாழ்.பிராந்தியநிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் யாழ்.பிராந்திய நிலையத்தினால் எந்திரவியல் தொழில்நுட்பக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவங்களை இன்று முதல் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை பிறவுண்வீதி கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இக் கற்கை நெறிக்கான அறிமுகக் கருத்தரங்கு நாளை வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் எனவும் யாழ் பிராந்திய நிலைய இணைப்பாளர்தெரிவித்துள்ளார். (எ)


**ஆரம்பம் : 07.01.2012 சனி**

**A/L - 2014 - புவியியல் ⊢ N. பாபு**

- 2011 – க.பொ.த. உயர்தரத்தில் கலைப் பிரிவில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் முதல் நிலை (First Rank) பெற்றோர் புவியியலை ஒரு பாடமாகத் தெரிவு செய்துள்ளனர்.

♦ சனி, ஞாயிறு - 10 am
♦ மாதாந்தம் பரீட்சைகள், மீட்டல்
♦ விடுமுறை நாட்களில் மேலதிக வகுப்புக்கள் நடைபெறும்

**DMI** ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (7229)


## மரண அறிவித்தல்

### திருமதி அருள்விழி மனோரஞ்சன்

மண்டைதீவு 8-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் சங்குவேலியை வாழ்விடமாகவும், தற்போது பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அருள்விழி மனோரஞ்சன் 28/12/2011 அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மனோரஞ்சனின் பாசமிகு மனைவியும், காலம் சென்றவர்களான இராசரெத்தினம் - நேசமணி தம்பதிகளின் பாசமிகு மகளும், செல்வரத்தினம் - தனலட்சுமி (ஜேர்மனி) தம்பதிகளின் அன்பு மருமகளும், லாவண்யா, அட்ஷயா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.

வேல்விழி, மலர்விழி, பரதன், பரணிகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவநேயசெல்வன், சாந்தினி, சிறிரஞ்சன், ரஞ்சன், கோகுலராஜன், சுதாகர், கிந்துஜா ஆகியோரின் மைத்துனியும், தரண்யா, கார்த்திகன் ஆகியோரின் அன்புச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.01.2012 வியாழக்கிழமை பிரான்ஸ் நேரப்படி பி.ப 1.30 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராகி அம்மன் கோவில் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (7230)

தகவல்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் அதிபர், திரு.சு.தியாகலிங்கம் அவர்களின் பாசமிகு மாமனார்

அமரர் தியாகர் அருணாசலம் அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு அவரது பிரிவால் ஆறாத் துயரில் இருக்கும் அவரது குடும்பத் துயரில் பங்கு கொள்வதோடு, அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லூர் (7226) கோட்டக்கல்விப்பணிப்பாளர், அதிபர்கள்


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

**06.01.2012 முதல் 10.01.2012 வரை 5 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-**

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு.ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம்,நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

(C-5423) றமணி கெஸ்ற் கவுஸ் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் முன்னால்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
47,49, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம்.



## ஜேர்மன் மொழியும்! இலகு வழியும்!

ஜேர்மன் மொழியியல் பரீட்சையான A1 சான்றிதழ் பரீட்சை எடுப்பவர்களுக்கு (Eruopa bildungs forum) இனால் பயிற்றப்பட்ட ஜேர்மன் மொழியியல் ஆசிரியர் ஊடாக கற்பித்தல் வகுப்புக்கள் உடனடியாக ஆரம்பிக்க இருப்பதால் இந்த வகுப்பில் கலந்துகொள்ள விரும்புவோர்க்கு:-

1. அதிவிஷேட பயிற்சி பெற்ற ஆசிரியர் சென்ற வருடம் 75%மான மாணவர்கள் 60 புள்ளிகளை பெற்று பரீட்சையில் சித்தி பெறச் செய்தவர்.
2. ஜேர்மன் பரீட்சைக்கான அங்கீகாரம் பெற்ற Gothe Institute நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியரும் நிறுவனமும் இதுவாகும்.
3. ஜேர்மன் மொழி கற்பிற்பதற்கான வடமாகாணத்தில் Gothe Institute டினால் நிர்மாணிக்கப்பட்ட நூலக வசதியும் எம்மிடம் உள்ளது.
4. மாணவர்களின் நலன் கருதி கற்பித்தலுக்கான Video, Oudio சாதன வசதிகளும் எம்மிடம் உள்ளது.
5. அடுத்த A1 பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்துவதற்கு முன்பு அதிவிஷேட துறைசார் பேராசிரியை திருமதி Marion Bergmann அவர்களால் விஷேட இரண்டு வார கருத்தரங்கும் நடைபெறும்.

முக்கிய குறிப்பு :- இந்த பயிற்சிநெறி பரீட்சைவரை 220 மணித்தியாலங்கள் கற்பித்தல் இடம்பெறும்.

6. பரீட்சைக் கட்டணம் தவிர பயிற்சிக்கட்டணம் 40000.00/= மட்டுமே அறவிடப்படும்.
7. 30.01.2012ற்கு முன்னர் பயிற்சிக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-

விலாசம் - Muthmann&Gorenflo நிறுவனமும்
Eruopa bildungs forum நிறுவனமும்
இல.29 பழம் வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் - 021 7200157

(அ-5438)

# இன்று ஒரு தகவல்

## தேர்தல் பண்பாடு

"அந்த ஆளைக் கண்டதும் ஏன் இப்படி முகத்தைத் திருப்பிக் கொண்டு வருகிறீர்கள்?'' என்று என்னுடன் வந்தவரைப் பார்த்துக் கேட்டேன்.

"தேர்தலில் என்னை எதிர்த்து நின்றவன் சேர் அவன்... அவனிடம் நமக்கு என்ன கதை?'' மிகவும் கோபமாகச் சொன்னார்.

"சரி அவர் யார்" என்று கேட்டேன்.

"என்கூடப் பிறந்த தம்பிதான் சேர்" என்று கோபம் குறையாமல் கூறினார்.

லண்டனில் எப்படி தெரியுமா?

அங்கே ஒரே மேடையிலே போட்டி போடுகிற இரண்டு வேட்பாளர்களும் பிரசாரம் செய்வார்கள்.

பட்டிமன்றம் மாதிரி ஒருவர் முதலில் எழுந்திருப்பார். "நான் வெற்றி பெற்றால், என்னென்ன செய்வேன்" என்று சொல்லிவிட்டு அமர்ந்திடுவார்.

அதனைத் தொடர்ந்து மற்றவர் எழுந்திருப்பார். தான் வெற்றி பெற்றால், என்னென்ன செய்வார் என்பதை சொல்லிவிட்டு உட்காருவார்.

மக்கள் இரண்டு பேரின் பேச்சையும் கேட்டுவிட்டு ஒருமுடிவுக்கு வருவார்கள்.

ஒரு தடவை இதுமாதிரி ஒரு கூட்டம் நடந்துகொண்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்தில் சரியாக ஒரு வேட்பாளர் வந்து சேர்ந்தார். தனக்கு ஏன் வாக்களிக்க வேண்டுமென்பதை பற்றி உரை நிகழ்த்தினார். அதற்கான காரணங்களையும் வரியாக எடுத்துரைத்தார்.

ஏனைய வேட்பாளர்கள் வந்து சேரவில்லை. சிறிது நேரம் மக்கள் அவருக்காகக் காத்திருந்தார்கள். அதன் பின்னர் அந்த முதல் வேட்பாளரே மறுபடியும் எழுந்து ஒலி வாங்கிக்கருகில் வந்து நின்று உரையாற்ற ஆரம்பித்தார்.

"என்னை எதிர்த்து போட்டியிடும் வேட்பாளர் இன்னமும் இங்கே வந்து சேரவில்லை. அதனாலே அவர் தன் பக்கமுள்ள நியாயங்களை எடுத்துச் சொல்லி தனக்காக வாக்கு கேட்கிற வாய்ப்பை இழந்து நின்றார்.

இன்னொரு விடயம். லண்டனில் வாக்கு கேட்கும்பொழுதே வெற்றியா தோல்வியா என்பதை ஓரளவிற்கு ஊகித்து விடலாம்.

ஒரு வேட்பாளர் வீட்டுக்கு முன்னால் போய் நின்று "எனக்கு வாக்களியுங்கள்" என்று கேட்கிறார்.

அதற்கென பார்த்து செய்கிறோம். சென்று வாருங்கள்... என்று சில வீடுகளில் வாசலிலேயே நின்று கொண்டு வழியனுப்பி விடுவார்கள்.

வேறு சில வீடுகளிலே... வேட்பாளரை வீட்டின் உள்ளே அழைத்து உபசரித்து அனுப்பி வைப்பார்கள்.

இதிலே எந்த வீட்டாரின் வாக்கு நிச்சயம் தெரியுமா? வாசலிலே நின்று வழியனுப்பி வைத்தவர்களின் வாக்கு நிச்சயம் கிடைக்கும். ஏனையவர்களின் வாக்கு நிச்சயமில்லை.

சரி, ஏன் அந்த உபசரிப்பு? என்று கேட்டால், அது ஒரு அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையாகும்.

"ஐயோ! பாவம் நாங்கள் இவருக்கு வாக்களிக்கமாட்டோம். இதையாவது செய்வோம்... சாப்பிட்டு போகட்டும்'' என்ற ஒரு மனநிலையில் அவர்களது உபசரிப்பு அமையும்.

ஒரு சமயம் .... ஒரு ஊரிலே தேர்தல் நடந்தது. ஒரு தொகுதியிலே நின்று வாக்குக் கேட்டவர் ஒரு துப்பாக்கியோடு ஊருக்குள்ளே சுற்றிக் கொண்டு திரிந்தார்.

பொலிஸார் அவரைப் பார்த்து சந்தேகப்பட்டார். அவரைத் தடுத்து நிறுத்தி... "என்ன இது துப்பாக்கியுடன் சுற்றுகிறாய்?" என்று விசாரித்தார்.

"சேர்... இந்தத் தொகுதியிலே மொத்தம் ஒரு இலட்சம் வாக்காளர்கள். அதிலே எனக்கு பத்தாயிரம் பேர் மட்டும்தான் வாக்களித்தார்கள். அப்படியென்றால் எனக்கு வேண்டாதவர்கள் இந்தத் தொகுதியிலே 90 ஆயிரம் பேர் இருக்கிறார்கள் என்பது அர்த்தம்.

அதனால்தான் நான் ஆயுதம் கொண்டு சுற்றித் திரிகிறேன். இப்படியான ஒரு சூழ்நிலையிலே நான் என்னுடைய பாதுகாப்புக்கு ஆயுதம் இல்லாமல் நடமாடலாமா? என்று கேட்டார். எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கிறார் என்று பாருங்கள்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி வலய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(பூநகரி)

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பு, புதிய கற்பித்தல் நுட்பங்கள், வேலைத்திட்டம், வேலைத்திட்டம் தயாரித்தல், ஆவணப்படுத்தல், மதிப்பிடுதல், அறிக்கையிடுதல் ஆகியன தொடர்பான செயலமர்வு நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்வுக்கு குறிப்பிட்ட இடங்களிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் பங்கு பற்றி இருக்க வேண்டும். அவ்வாறு பங்குபற்றாத ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி, உதவிக்கல்விப் பணிப்பாளரின் எழுந்து மூல அனுமதியைப் பெற்ற பின்னரே பாடசாலையில் அனுமதிப்படுவர் எனவும் அவர் அறிவித்துள்ளார். இச் செயலமர்வு கரைச்சி கோட்ட பாடசாலைகளுக்கு நாளை மறு தினம் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கிளி.பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

கண்டாவளை கோட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கிளி.பரந்தன் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கான செயலமர்வு எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை கிளி. பூநகரி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இச் செயலமர்வுக்கு வருகை தருகின்ற ஆசிரியர்கள் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி அறிக்கை, கணிப்பீடுகள், மதிப்பீடுகள், உரிய பாடஅலகு நிறைவேற்றியமை, விடுமுறை பெற்றிருப்பின் பதிலாசிரியரின் சேவை அறிக்கை, தற்போது கற்பிக்கின்ற வகுப்பிற்குரிய நேர அட்டவணை, PRI/01, PRI/02 பூரணப்படுத்தப்பட்ட படிவங்கள் என்பன நிறைவேற்றப்பட்டுள்ளன என அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைக் கொண்டு வருதல் வேண்டும். இவற்றுடன் உரிய வகுப்புக்களுக்குரிய ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி, அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சி கைநூல் என்பவற்றை கொண்டு வருதல் வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-2-84)

# புதிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் பாடசாலை விட்டு இடைவிலகிய மாணவர்களுக்கும் உயர் கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்குமான என்.வி.கியூ கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறியினை தொடர ஆர்வமுள்ள மாணவர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணி க்கு ஏ9 வீதியிலுள்ள கைதடி தொழிற் பயிற்சி நிலையத்துக்கும் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இப் பயிற்சி நெறியில் மோட்டார் வாகன பொறி வலர், கட்டட நிர்மாணம், கணனி வன்பொருள் பற்ற வைத் தல் ,நீர்க்குழாய் பொருத்துதல் போன்ற கற்கை நெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் உதவிக் கணக்காளர் த.சுரேஸ்குமார் அறிவித்துள்ளார்.

(அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 130 |
| உருளைக்கிழங்கு | 50 | 60-120 |
| பச்சைமிளகாய் | 170 | 240 |
| தக்காளி | 200 | 120 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 |
| கோவா | 80 | 80 |
| கரட் | 120 | 90 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 65 | 90 |
| வாழைக்காய் | 40-45 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-80 | 30-90 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 |
| பாகற்காய் | 120 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 |
| பயற்றங்காய் | 150 | 180 |
| லீக்ஸ் | 100 | 80 |
| பீற்றூட் | -- | 110 |
| கறிமிளகாய் | 180 | 240 |
| முருங்கைக்காய் | -- | -- |
| போஞ்சி | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 |
| தேசிக்காய் | 80-90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 |

# இராசி பலன்

*05.01.2012*
*(மார்கழி 20,வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு*
*ஏகாதசி முற்பகல் 9.20 மணிவரை*
*கார்த்திகை பின்னிரவு 12.58 மணிவரை*
*இராகுகாலம் 2.01-3.31 மணிவரை*
*சுபநேரம் 8.01-9.31 மணிவரை*
*ஏகாதசி விரதம், கார்த்திகை விரதம்.*

**மேடம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்** குரு வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்,போசன சுகமுண்டு.

**மிதுனம்** பயணங்களால் பலன் கிடைக்கும், நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்,சுப விரயங்கள் அதிகரிக்கும்,சயன சுகக்குறைவான நாள்.

**கடகம்** வருமானம் பெருகி வளம் காணும் நாள்,ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரியும் நாள்,குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள்.

**சிங்கம்** முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள்,புதிய தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்,தூரதேசச் செய்திகளால் மகிழ்ச்சியடைவீர்கள்,ஆரோக்கியமான நாள்.

**கன்னி** காரிய வெற்றி ஏற்படும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு மங்கையர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்,எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்** ஆலய வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம், குடும்பத்தில் இடையிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு குறையும்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், நண்பர்கள் உங்களுக்கு நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பர், தொழில் வளர்ச்சிக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.


**தனுசு** காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை அமையலாம்,இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்,ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்.

**மகரம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், செய்தொழிலில் உயர்நிலை ஏற்படலாம், புத்திரர் வழியில் பெருமைப்படும் சூழ்நிலை அமையலாம்.

**கும்பம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்,புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்,பெற்றோர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் குறையும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** உடன்பிறப்புக்களின் ஆதரவு பெறும் நாள், நீண்ட நாளைய பிரச்சினைகளுக்கு நல்ல முடிவுகள் கிடைக்கலாம், தொழில் வளர்ச்சியுண்டு, கௌரவமான நாள், காரியசித்தியுண்டு.

வள்ளுவன்



யாழ். பல்கலைக்கழகமும் கலைக்கேசரியும் இணைந்து யாழ்ப்பாண வாழ்வியல் கண்காட்சியினை நடத்துவதற்கு உதவி புரிந்தவர்களைக் கௌர்விக்கும் நிகழ்வு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக தொல்லியற்றுறைத்தலைவர் பேராசிரியர் புஸ்பரட்ணம் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நுண்பாக நிதித்திட்டம்

இலங்கை மத்திய வங்கியின் வறுமை ஒழிப்பு நுண்பாகநிதித்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தில் 23 அபிவிருத்திச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சங்கங்கள், கம்பனிகள் பதிவாளரினால் கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு புதிய பதிவுச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பருத்தித்துறையில் 7 அபிவிருத்திச் சங்கங்களும் மானிப்பாய் பிரதேசத்தில் 4 அபிவிருத்திச் சங்கங்களும் வல்வெட்டித்துறை .பிரதேசத்தில் 2 அபிவிருத்திச் சங்கங்களும் அமைந்துள்ளன.

மேலும் கோப்பாய் பிரதேசத்தில் 4 அபிவிருத்தி சங்கங்களும் கிளிநொச்சி பிரதேசத்தில் 3 அபிவிருத்திச் சங்கங்களும் முல்லைத்தீவு பிரதேசத்தில் 3 அபிவிருத்திச் சங்கங்களும் அமைந்துள்ளன.

இவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் சங்கங்கள் சுயதொழில் முயற்சிகளுக்கான கடன் வழங்கும் நிறுவனங்களாக இயங்கவுள்ளன.இச்சங்கங்கள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத் தின் கீழ் அமைக்கப்பட்டு குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் உள்ள இலங்கை வங்கி கிளைகளின் அனுசரணையுடன் இயங்குகின்றன.

இச்சங்கங்கள் யாவும் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக சங்கத்தின் நிர்வாக சபையாலே நிர்வகிக்கப்படும் என யாழ். வறுமை ஒழிப்பு நுண்பாக நிதிச் செயற்றிட்ட வலய முகாமையாளர் எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார். (அ)

# காணாமல்போன ஜே.வி.பி.கட்சி உறுப்பினர்கள் குறித்து விசாரணை

## யாழ்.பிராந்திய மனிதஉரிமை ஆணைக்குழு

மனித உரிமைகள் தினமன்று காணாமல் போன மக்கள் போராட்ட இயக்கத்தைச் சேர்ந்த இருவர் தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ். பிராந்திய மனித உரிமை ஆணைக் குழுவின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

மனிதவுரிமை தினமாக கடந்த மாதம் 10 ஆம் திகதி மக்கள் போராட்ட அமைப்பினால் யாழ் .பஸ் நிலையம் முன்பாக காணாமல் போனோரை மீட்டுத் தரக்கோரி போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.இப்போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக கடந்த 9 ஆம் திகதி மாலை ஆவரங்காலில் இருந்து யாழ். நகர் வந்து கொண்டிருந்த போது ஜே.வி.பி கட்சியின் செயற்பாடுகளை யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்து வந்த லலித்குமார் வீரராஜ் (வயது-29) மற்றும் அவரது சகபாடியான ஆவரங்காலை சேர்ந்த குகன் முருகானந்தன் (வயது-36) ஆகியோர் காணாமல் போயினர். இவர்களுடைய மனைவிமாரின் முறைப்பாட்டினைத் தொடர்ந்து அவர்கள் வழங்கியிருந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அச்சுவேலி பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்முதற்கட்டமாக அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினை நாளை வெள்ளிக்கிழமை எமது பணியகத்தில் சந்திக்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

காணாமல்போன இருவரும், காணாமல் போனவர்களை மீட்க வேண்டுமென போராடுவதற்காக வருகை தந்தவேளை காணாமல் போய்விட்டதாக அவர்களது உறவினர்கள் ஏமாற்றத்தோடு தெரிவித்தனர். (அ-4)

# இளைஞர் சமூகத்தினர் பொறுப்புடன் செயற்பட்டு சீரழிவை தடுக்கவேண்டும்

## யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்கள் அதிகரித்து வந்தாலும் முன்னைய வருடத்தினைப் போன்று இந்த வருடம் அமையாது என யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் என்றுமில்லாதவாறு மக்கள் அதிகரிப்பால் நிரம்பி வழிகின்றது. பயணிகளினதும் வாகனங்களினதும் அதிகரிப்பே இதற்குக் காரணம். இங்கு யார் வருகின்றனர், யார் செல்கின்றனர், எதைக் கொண்டு வருகின்றனர் என்று தெரியாமல் இங்குள்ள மக்கள் வாழ்கின்றனர்.

போதைவஸ்துக்கள் முதற்கொண்டு துஷ்பிரயோகம் வரை இங்கு மலிந்து கொண்டு செல்கின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சமூகத்திலுள்ள அனைவரும் முன்வரவேண்டும்.

யார் யார் உங்கள் வீடுகளுக்கு அருகில் வந்து குடியிருக்கின்றனர் என்பதனை கொஞ்சமாவது அறிவதற்கு முயற்சி செய்தல் வேண்டும். அதைவிடுத்து அலட்சியப்படுத்தினால் அதன்முடிவு வேறுவிதமாக அமைந்துவிடும்.

உங்கள் கிராமங்களில் சந்தேகத்திற்கிடமாக யார் நடமாடினாலும் வன்முறையில் ஈடுபட்டாலும் அவர்களை பொலிசாருக்கு இனங்காட்ட வேண்டும்.

போலி முகவர்கள், வேலைவாய்ப்புப் பெற்றுத்தரப்படும் என்று கூறுபவர்களுடன் பிள்ளைகளை அனுப்பி வைக்கக்கூடாது. இளைஞர் குழுக்கள் வீதிகளில் நின்று சேட்டை புரிவோரை பொலிஸாருக்கு இனங்காட்ட வேண்டும்.

இளைஞர்கள் மத்தியில் போதைவஸ்து பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த வருட ஆரம்பத்தில் கூட போதைவஸ்து குற்றச்சாட்டில் 3 நபர்களை கைதுசெய்துள்ளோம்.

எது எவ்வாறானாலும் நாம் புதிய ஆண்டில் காலடி வைத்துள்ளோம். ஆகவே நாம் முன்னைய ஆண்டினை விட இந்த ஆண்டில் குற்றச்செயல்கள் நடைபெறுவதனைக் கட்டுப்படுத்த பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். (அ-4)

# யாழ்.செய்திகள்

## சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் நிலையத்தில் பாடசாலையை விட்டு விலகியோருக்கான **எல்லோருக்கும் ஆங்கிலம்** என்ற கற்கை நெறியை கடந்த 2008 ஆம் ஆண்டு பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள இச்சான்றிதழ்களை யாழ். புலோலி மெதடிஸ்த மிஷன் த.க.பாடசாலையில் பெற்றுக் கொள்ள முடியும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் அறிவித்துள்ளார். (அ)

# வர்த்தக நிலையங்கள் இன்று திறக்கப்படும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினரால் சில கோரிக்கைகளை முன் வைத்து மன்ற எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் நேற்று புதன்கிழமை மூடப்பட்டிருந்தன.

அதனையடுத்து யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் நகர சபை நிர்வாகத்தினருக்கும் கைத்தொழில் வணிகர் மன்றத்திற்கும் இடையில் நடத்திய சமரச முயற்சியையடுத்து இன்று வியாழக்கிழமை தொடக்கம் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அச்சுவேலி)

வடமராட்சி வடக்கு வல்லிபுர கிராமத்தில் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 81 காணிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-70)

# சாதனை மாணவனுக்கு கௌரவிப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரம் கணிதப்பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் கமலக்கண்ணன் கமலவாசனுக்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி நேற்று முன்தினம் மாலை3 மணிக்கு யாழ்ப்பாண நூலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேற்படி இம்மாணவனுக்கு மக்கள் வங்கி ஒரு இலட்சம் ரூபாயையும் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி பழைய மாணவர்கள் ஐம்பதாயிரம் ரூபாயையும் வடமாகான கல்வி வலயம் வெற்றிக் கேடயத்தையும் நெல்லியடி தொழில் அதிபர் ரி.பாஸ்கரன் ஐந்தாயிரம் ரூபாயையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-11-24)

# சமூகவிரோத செயல்களை நிறுத்த நடவடிக்கை அவசியம்

## சிவசக்தி எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு குடிபோதையில் களவு மற்றும் சமூக விரோதச் செயல்களில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பாக பொதுமக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்தும் சமூக விரோதிகள் உரிய விசாரணையின்றி விடுவிக்கப்பட்டுள்ளனர் என கூட்டமைப்பின் பா.உ. சிவசக்தி ஆனந்தன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் மீள்குடியேற்றம் நடைபெறாத பகுதியின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரணைத் தாண்டி பொதுமக்கள் செல்வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் சமூக விரோதிகள் இந்தக் காவலரணில் உள்ள இராணுவத்தினருக்குச் சாராயம், சிகரெட், செல்பேசி, முற்கொடுப்பனவு அட்டைகள் போன்றவற்றைக் கொடுத்து இப்பகுதிக்குள் சென்று பாடசாலைத் தளபாடங்கள், வீட்டுத் தளபாடங்கள், கதவுகள், யன்னல்கள் உள்ளிட்ட பொருட்களையும் மக்களால் கைவிடப்பட்ட இரும்பு பொருட்களையும் கொள்ளையடித்துச் செல்வதுடன் மக்கள் குடியேறிய இடங்களில் இரவு நேரங்களில் குடிபோதையில் கும்மாளத்திலும் ஈடுபடுகின்றனர். இதனால் பாதுகாப்பற்ற தற்காலிகக் கூடாரங்களில் வசிக்கும் மீள்குடியேறிய மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு இத்தகைய செயற்பாடுகளால் பெரிதும் சிரமப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அப்பகுதிக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தையும் சமூக விரோதிகளையும் பெட்டியுடன் இழுத்துச் சென்றுள்ளனர்.

தினமும் நான்கைந்து வாகனங்களில் களவுப் பொருட்கள் ஏ9 வீதியினூடாகக் கொண்டு செல்லப்படுகின்றன. கடத்தலிலும் களவுகளிலும் ஈடுபடுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு அமைச்சில் தங்களுக்குச் செல்வாக்கு இருப்பதாகக் கூறி தப்பிவிடுகின்றனர்.

ஆகவே, தாங்கள் இந்த விடயத்தில் நேரடியாக கவனம் செலுத்தி பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் துணையுடன் மேற்கொள்ளப்படும் இத்தகைய களவுகளையும் சமூக விரோதச் செயல்களையும் தடுத்து நிறுத்துவதற்கு ஆவன செய்து மீள்குடியேறிய மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தி பொதுமக்களின் எஞ்சிய சொத்துக்களைப் பாதுகாத்து அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுங்கள் என அதில் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# கடந்த ஆண்டில் மிதிவெடி விபத்தில் 731 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த 2011 ஜனவரி முதல் டிசெம்பர் 22 ஆம் திகதி வரை மிதிவெடி மற்றும் கண்ணிவெடிகள் உள்ள பிரதேசங்களாக 44,898,662 சதுரமீற்றர் பரப்பளவு இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் யாழில் 39,120,341 சதுர மீற்றர் பரப்பளவில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளது. 5,778,321 சதுரமீற்றர் பரப்பளவு மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

இதேவேளை, 113,236 கண்ணிவெடிகள் கண்டு எடுக்கப்பட்டுள்ளதுடன் வாகனங்கள் மற்றும் பாரிய வெடிபொருட்கள் 255 மீட்கப்பட்டுள்ளதாகவும் வெடிக்காத ஏனைய பொருட்கள் 103,930 கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி காலப் பகுதியில் 731 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# க.பொ.த. (உ/த) பெறுபேறுகள்

**யா/ வடமராட்சி மத்திய கல்லூரி**

**கணிதப்பிரிவு**

செ.அனுதர்சா (3ஏ), ம.சிந்துஜா (2சிஎஸ்), அ.அனுஷா (3எஸ்)

**விஞ்ஞானப்பிரிவு**

ப.மயூரி (3ஏ), சு.அனுஷா (ஏசிஎஸ்), ம.நிரோஜா (பி2சி), ந.நிரோஜா (3சி), ஜெ.திவ்யா (பிசிஎஸ்), பா.தேனுவதனி (2சிஎஸ்).

**வர்த்தகப்பிரிவு**

சி.ஆராதனா (ஏ2பி), த.திருமகளினி (2பிசி), ஜெ.நிவேதா (பி2சி), சி.தர்சிகா (பி2சி), யோ.நிவேதா (பி2சி), கு.யசோதா (பிசிஎஸ்), த.ஜோஸ்லின் ஜெனிற்றா (பி2சி).

**கலைப்பிரிவு**

மு.யதுநந்தா (3ஏ), ம.திவ்யா (3ஏ), வி.அமிர்தப்பிரியா (ஏ2பி), கு.அபர்ணா (2ஏசி), பு.மயூரி (ஏ2பி), நா.சுபாஜினி (ஏபிசி), சு.தரணிகா (ஏபிசி), பா.பாலகௌரி (ஏபிசி), மு.விணோதர்சினி (2ஏசி), கு.நிவேதிகா (3பி), கு.தர்சிகா (ஏபிசி), ச.ஜனனி (ஏபிசி), சி. சர்மிளா (ஏபிசி), ம.மேரி கிறிஸ்ரலா (2ஏசி), ரா. அபிரா (2பிசி), இ.கிருஷிகா (ஏ2பி), ந.துவாரகா (2ஏபி), க.நிருபா (2ஏபி), க.கஜனி (2ஏபி), வ.வசந்தா (ஏ2பி), வே. அனித்தா (ஏ2பி), கு.நிருஷிகா (ஏ2பி), செ.நிசாந்தினி (2ஏசி).

**யா/வைத்தீஸ்வரா கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

எ.வ.டினேஸ்(ஏபிசி),

**கலைப்பிரிவு**

சி.லாவண்யா(2ஏபி), ந.கார்த்திக்(2ஏசி), செ.செந்திரிகா(2ஏசி), இ.சுவீதா(ஏபிசி), சி.விஜித்தா(ஏபிசி), ற.திவாகர்(பி2சி), கு.சகானா(பி2சி), கி.சதீஷா(பி2சி), ச.நிருசன்(பி2சி), வி.பியூலா (பி2சி).

**யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

பு.சஞ்சிகா(ஏ2பி), உ.உஷானா (ஏ2பி), வி.சஞ்சிகா(2பிசி), ந.றஜிந்தா (2பிசி), சூ.சுலக்ஷனா (2பிசி), இ.கோபிகா(2பிசி), செ.ஸ்ரீஆதவன் (ஏ2சி), சு.ஜீவிதன் (ஏபிஎஸ்), எ.கஜந்தினி(2பிசி). தா.மதுர்ஷன் (2பி எஸ்),

**வர்த்தகப்பிரிவு**

த.சர்மிலன்(2பிசி).


ஈழத்துச் சிதம்பர சிறப்பம்சம்



## காரை ஈழத்து சிதம்பர சுந்தரேசன் வாழுமிடம்

தத்துவங்கள் ஆடிவரச் சக்திசிவம் ஆடுமிடம்
வித்தகர்கள் கூடிவர விடங்கரவர் நாடுமிடம்
புத்தகம் போல் யாவர்க்கும் புதிய ஒளி நல்குமிடம்
தேரோடும் வீதியிலே திரு ஆடி நிற்குமிடம்
ஏரோடு நில மங்கை இணைந்துவளம் சேர்க்குமிடம்
புவியரசி ஆயிரமாய்ப் பூச் சொரிந்து பார்க்குமிடம்
கவியரசர்க் காயிரமாய்க் கற்பனைகள் பூக்குமிடம்
காரை ஈழத்து சிதம்பர சுந்தரேசன் வாழுமிடம்





மதுரகவி.காரை எம்.பி அருளானந்தன்

இன்று(2012.01.05) திருவெம்பாவை 7 ஆம் நாள்

விளம்பர அனுசரணை: சிவனடியான் (சி-5411)



எமது நிறுவனத்தில் கல்விகற்று யாழ். மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அதி முன்னணிப் பெறுபேறுகளைப்பெற்று எமது நிறுவனங்களுக்கு பெருமையீட்டி தந்த அனைத்து மாணவர்களையும் வாழ்த்தி இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட இதோ ஆரம்பமாகின்றது.

**A/L 2014** **கலை, வர்த்தகப் பிரிவு**

**ஜனவரி 7இல்**

நீங்கள் நன்கு அறிந்த யாழ். மாவட்டத்தின் கலை ,வர்த்தகத்துறையில் மிகப் பிரபல்யம் பெற்ற முன்னணி ஆசிரியர் குழுவினால் எமது மூன்று நிறுவனங்களிலும்

| பொருளியற் கல்லூரி | | | BARATHY |
|---|---|---|---|
| சனி- ஞாயிறு நாட்களில் மட்டும் | | | சனி- ஞாயிறு உட்பட |
| இடம் | நாவலர் றோட், யாழ்ப்பாணம். | K.K.S றோட், இணுவில். | பிரதான வீதி, சித்தன்கேணி. |
| பொருளியல் | வரதராஜன் | மகேந்திரன் | மகேந்திரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் | திருக்குமரன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி | பசில் |
| தமிழ் | சத்தியவேந்தன் | சத்தியவேந்தன் | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் | N.T தரன் |
| புவியியல் | குமரன் | குமரன் | குமரன் |
| வரலாறு | சுதன் | சுதன் | சுதன் |
| அரசியல் | கோகுலன் | கோகுலன் | கோகுலன் |
| அளவையியல் | ஜெயசுரேஸ் | ஜெயசுரேஸ் | R.P சர்மா |
| நாட-அரங்கியல் | கணேஷ் | கணேஷ் | கணேஷ் |
| கிறிஸ்தவ நாகரிகம் | வசந்தன் | வசந்தன் | வசந்தன் |
| இந்துசமயம் | தரன் | தரன் | தரன் |
| ஊடகவியல் | ஆனந்தன் | ஆனந்தன் | ஆனந்தன் |
| இலகு கணிதம் | ஐங்கரன் | ஐங்கரன் | ஐங்கரன் |
| சித்திரம் | சிறிஸ் | சிறிஸ் | சிறிஸ் |
| மனைப்பொருளியல் | தர்சிகா | தர்சிகா | தர்சிகா |
| சங்கீதம் | குமுதினி | குமுதினி | குமுதினி |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் | நிஷாந்தன் |
| I.C.T | அம்பிகபாகன் | அம்பிகபாகன் | அம்பிகபாகன் |
| விவசாய விஞ்ஞானம் / விவசாய தொழில் நுட்பம் / உணவு தொழில் நுட்பம் | விக்கி | விக்கி | விஷ்ணுதேவன் |

குறிப்பு:- எமது நிறுவனத்தை ஒத்த பெயரில் இணுவில் தவிர யாழ். நகரில் வேறு எந்த கல்வி நிறுவனங்களும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம்.

**A/L DAY CLASS**

சகல பாடங்களும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
பிரிவு- I திங்கள் முதல் வெள்ளிவரை
பிரிவு- II சனி, ஞாயிறு

உங்கள் அனுமதிகளை விரும்பிய இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**A/L 2014** → மாணவர்கள் கவனத்திற்கு

உங்கள் அனுமதிகளை தினமும் காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளவும். (சி-3433)

# கிளிநொச்சி பகுதியில் மின்சார வசதியை ஏற்படுத்துவதில் தாமதம்

## மக்கள் விசனம்

(கிளிநொச்சி)

இலங்கை மின்சார சபையினர் கிளிநொச்சி நகரப் பகுதியின் முக்கிய இடங்களுக்கு மின்சார வசதியை ஏற்படுத்துவதில் தாமதம் காட்டுவதாக பொதுமக்கள் தரப்பில் முறையிடப்படுகிறது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி ஏ-9 வீதிக்கு அண்மையில் உள்ள கரைச்சி பிரதேச செயலகம், கட்டடங்கள் திணைக்களம், பிராந்திய உள்ளூராட்சி திணைக்களம், கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி பணிமனை அமைந்துள்ள இடத்திற்கு செல்லும் பிரதான ஆலயமான கண்ணன் ஆலயம் அமைந்துள்ள வீதிகளுக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்தித்தரவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியில் கட்டடங்கள் திணைக்களத்திற்கு முன்பாக மின்கம்பம் நடப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையில் மின்கம்பி பொருத்தப்பட்டும் மின்சார இணைப்பு ஏற்படுத்தப்படவில்லை.

வடக்கின் வசந்தம் திட்டத்தில் இலவசமாக மீளக்குடியேறிய மக்களுக்கு மின்சாரம் கிடைப்பதற்கு விண்ணப்பித்த பலருக்கும் இதுவரை மின்சாரம் கிடைக்கவில்லை.

தற்போது இலவச மின்சாரம் பெறும் திட்டத்தை கைவிடவும் திட்டமிடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)


# மாணவர் விபரங்கள் கோரப்படுகின்றன

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களில் செவிப்புலன் சக்தி குறைபாடுடைய மாணவர்களுக்கு அதியுயர் தொழில் நுட்பத்துடனான கேட்டல் உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஒன்றினை கல்வி அமைச்சு முன்னெடுக்கவுள்ளது.

பாடசாலை அதிபர்கள் தங்களுடைய பாடசாலைகளில் முற்றாக கேட்கும் சக்தி இல்லாத மாணவர்களின் விபரங்களை பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து உடன் அனுப்பி வைக்குமாறு துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# சந்திரனில் வேற்றுக்கிரகவாசிகளின் கால்தடங்கள் கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)

சந்திரனில் மனிதர்கள் வாழக்கூடிய சூழ்நிலை உள்ளதா? என்பது குறித்து ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் சந்திரனில் வேற்றுக்கிரகவாசிகள் உலா வருவதாக தகவல் வெளியாகி உள்ளன.

அமெரிக்காவில் உள்ள அரிசோனா மாகாண பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் இது குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டனர்.

அப்போது சந்திரனின் மேற்பகுதியில் வேற்றுக்கிரகவாசிகளின் கால்தடங்கள் பதிந்து இருப்பது தெரிய வந்தது.

அவை சந்திரனுக்கு நாசா விண்வெளி மையம் அனுப்பியுள்ள விண்கலத்தில் உள்ள ரேடியோ சிக்னல் எடுத்து அனுப்பிய வரைபடத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. (அ-2)

# பாரதவின் கொலை சந்தேகநபர்கள் அணிவகுப்பில் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

கொலன்னாவ துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உள்ளிட்ட மூவர் தொடர்பில் நேற்று முன்தினம் அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக கைதான 20 சந்தேகநபர்களில் 19 பேர் நீர்கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே குறித்த சந்தேகநபர்களை அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறு நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டுள்ளார்.

நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் 10 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அடையாள அணி வகுப்பில் சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தன ஜகத் குமார, சமித்த ரவி ஜயநாத், நாலக சமீர, விதானகமகே அமில, சரத் பண்டார, சுரங்க பிரேமலால், சமன் குமார, ரோஹன மாரசிங்க, என்.எல். சமிந்த ஆகியோரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை கைது செய்வதற்கு இதுவரையில் ஆலோசனை கிடைக்கப் பெறவில்லை என புலனாய்வுப்பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். (அ-2)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
நல்லூரை வசிப்பிடமாகவும்

**வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்**
(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

தோற்றம்
02.02.1935



மறைவு
07.12.2010

**நல்லம்மா சுப்பிரமணியம்**

தோற்றம்
05.04.1941



மறைவு
22.06.2010

அறிவில், ஆற்றலில், பாசத்தில், சிறந்த
உள்ளத்தில் உயர்ந்து
பல்லோரும் போற்ற வாழ்ந்த
எங்கள் தெய்வத்தின் நினைவாக
ஆத்ம சாந்திக்காக
எல்லாம்வல்ல
இறைவனை வேண்டிப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-5434)

தகவல் :- மக்கள்.

# 2012 ஆம் ஆண்டிற்கான செயற்குழு ஸ்தாபிக்கப்படும்

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சி யாப்பின் பிரகாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் 2012 ஆம் ஆண்டுக்கான செயற்குழுவை மீண்டும் ஸ்தாபிக்கவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிடுகின்றார்.

கட்சியின் எதிர்காலத் திட்டம் தொடர்பாக தெளிவுபடுத்துவதற்காக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

கட்சியின் யாப்பின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டுக்கான செயற்குழுவை மீண்டும் ஸ்தாபிக்க வேண்டியுள்ளதாக கூறிய அத்தநாயக்க 2012 ஆம் ஆண்டுக்கான பல்வேறு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இரண்டு சிரேஷ்ட உதபதலைவர்கள், மூன்று உப தலைவர்கள், இரு உதவிச் செயலாளர்கள் உள்ளிட்ட மேலும் பதவி வெற்றிடங்களை நிரப்ப வேண்டியுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து ஆராயும் வகையில் கட்சித் தலைவர் விக்கிரமசிங்க தலைமையில் இன்று ஆலோசனைக்குழு கூடவுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (அ-2)

# தனியார் பல்கலைக்கழகங்கள் அமைப்பது குறித்து அமைச்சரவை கூட்டத்தில் பேசுங்கள்

## வெளியில் விமர்சிக்க வேண்டாம் என்கிறார் உயர்கல்வி அமைச்சர்

அரசாங்கத்திலுள்ள சிலர் தனியார்பல்கலைக்கழகங்களை அமைப்பது தொடர்பில் பகிரங்கமாக எதிர்ப்பினை வெளியிடும் செயலை கைவிட வேண்டும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான புதிய சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படுமென்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இவ்வாண்டில் முதலாவதாக அமைச்சின் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு கடந்த திங்கட்கிழமை காலை நடைபெற்றது. இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்.

அரசாங்கத்திற்குள் அங்கம் வகிக்கும் சிலர் தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பது தொடர்பில் தமது எதிர்ப்பினை பகிரங்கமாக வெளியிடுகின்றார். இது பிழையான செயற்பாடாகும். ஏதாவது பிரச்சினைகள் இருக்குமாயின் அமைச்சரவைக் கூட்டத்திலோ அல்லது அமைச்சர்கள் மட்டத்திலோ பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகளை காண முடியும்.

அதைவிடுத்து பகிரங்கமாக எதிர்ப்புக்களை வெளியிடுவது உசிதமல்ல. இலங்கையில் ஏற்கனவே 30 தனியார் பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன.

ஆனால் எந்தவொரு தனியார் நிறுவனம் பட்டப்படிப்பை மேற்கொள்ளவும் சான்றிதழை வழங்கவும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுக்கு விண்ணப்பிக்க முடியும். இவ்விண்ணப்பங்களை ஆராய்ந்ததன் பின்னர் அதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் எமக்கு உள்ளது. உயர்தர டிப்ளோமா பாடநெறிகளை தரம்மிக்கதாக்குவற்கு பாராளுமன்றத்திற்கு புதிய சட்ட மூலமொன்றை கொண்டு வரவுள்ளோம். ஏனென்றால் நாட்டில் ஒரு மாதத்தில், 3 மாதத்தில் டிப்ளோமாக்கள் வழங்கும் கல்வியை விற்பனை செய்யும் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

இதனைத் தடுப்பதே புதிய சட்ட மூலத்தின் நோக்கமாகும். பல்கலைக்கழகங்களுக்குள் ஜே.பி.வி.யை சார்ந்த சிலர் குழப்பங்களை ஏற்படுத்துகின்றனர். அவ்வாறானவர்கள் இன்று அக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றார். (அ-2)

# இந்திய மீனவர்கள் அவர்களின் சொந்த நாட்டிற்கு அனுப்பி வைப்பு

## கடற்படை பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்ட 35 மீனவர்களும் நேற்று முன்தினம் அவர்களது சொந்த நாட்டிற்கு அனுப்பி வைக்கபட்டிருப்பதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசிங்க தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணை முடிவடைந்ததையடுத்து இவர்கள் முறையே இலங்கை கடற்படையினாரால் இந்திய கரையோர காவற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் வைத்து மீட்கப்பட்ட 35 மீனவர்களும் அவர்களது இரண்டு மீன்பிடி படகுகளுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையினரால் இந்திய கரையோர காவற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்டிருக்கும் 35 இந்திய மீனவர்களுள் 29 பேர் மீன்பிடி பயிற்சியின் போது படகு சேதமாகியதால் தத்தளித்த வண்ணம் உயிருக்கு போராடிய போது மீட்கப்பட்டனர்.

ஏனைய ஆறு பேரும் தானே சூறாவளி காரணமாக திசை மாறி இலங்கை கடற்பரப்பிற்குள் வந்தவேளை இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

மேலும் சூறாவளி காரணமாக காணாமல் போன 15 இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் வடக்கு கிழக்கு கடற்பரப்புக்களில் கடற்படையினரால் தேடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (அ-2)

# சவுதியில் பலியான இலங்கையர்களின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்கப்படும்

## ரியாத் நீதிமன்றம் பணிப்பு

சவுதி அரேபியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு விபத்து ஒன்றில் பலியான இலங்கையர்களின் குடும்பத்தினருக்கு நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரியாத்தில் இடம் பெற்ற இந்த விபத்தில் 5 இலங்கையர்கள் உட்பட 19 பேர் பலியாகினர்.

இந்த விபத்தில் சிக்கிய பேருந்து முழுவதும் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் ரியாத் நீதிமன்றில் சம்பவம் தொடர்பில் இடம்பெற்று வந்த வழக்கில் விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்குவதாக குறித்த காப்புறுதி நிறுவனம் இணங்கியது.

இதன் அடிப்படையில் விபத்தில் சிக்கிய ஐந்து பேரின் குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்சம் சவுதி ரியா ல்கள் வீதம் வழங்கப்படவு ள்ளதாக நீதிபதி காலிட் அல் ஜசீர் அறிவித்துள்ளார். (அ-2)

# 9,680 பேர் நாய்க்கடிக்கு இலக்காகினர்

யாழ்.குடாநாட்டில் கடந்த 2011 ஜனவரி முதல் டிசெம்பர் வரை 9 ஆயிரத்து 680 பேர் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் விலங்கு விசர் நோய் தடுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 76, 829 நாய்கள் வீடுகளில் வளர்க்கப்படுவதாகவும் அதற்கு தடுப்பு மருந்துகள்போடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விலங்கு விசர் தொடர்பாக 5,322 பேருக்கு தடுப்பு மருந்து ஏறப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் மரணங்கள் ஏதும் சம்பவிக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)





யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர் அணிக்கும் யாழ் விளையாட்டு உத்தியோகத்தர் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர் அணி வெற்றிபெற்றது. இப்போட்டியினை யாழ். மாவட்ட விளையாட்டு ஆசிரியை ஜே.எ.ரூபசிங்கம் ஆரம்பித்து வைப்பதனையும் வெற்றியீட்டிய அணியினரையும் படங்களில் காணலாம்.

# வெளிநாடுகளைப் போல இங்குள்ள பேருந்துகளிலும் ரீலோட் அட்டைகள்

## இ.போ.ச. தலைவர் எம்.பி.பந்துசேன

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகளில் டிக்கெட் வழங்கும் முறையை நிறுத்தி ரீலோட் அட்டை வழங்கும் முறையொன்றை அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளதாக இ.போ.ச. தலைவர் எம்.டி. பந்துசேன தெரிவித்துள்ளார்.

தெற்கு நெடுஞ்சாலையினூடாக புதிய இ.போ.ச, பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்தும் வைபவம் நேற்று முன்தினம் மகரகம பேருந்து தரிப்பிடத்தில் நடைபெற்றது. இங்கு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

இரண்டு இ.போ.ச. அதி சொகுசு பேருந்துகளை அதிவேக நெடுஞ்சாலையில் ஈடுபடுத்த அனுமதி பெற்றுள்ளோம்.

தேவைப்பட்டால் மேலும் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவோம். நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஏற்ப இ.போ.ச. வில் பல மாற்றங்களை செய்து வருகிறோம். பேருந்துகளில் ஒன்லைன் ஊடாக ஆசன பதிவு செய்யும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் குமார வெல்கமவின் ஆலோசனைப்படி டிக்கெட்டுக்குப் பதிலாக ரீலோட் அட்டை வழங்கும் புதிய முறையை விரைவில் கொண்டு வர உள்ளோம். இணையம் மூலம் இந்த சேவை முன்னெடுக்கப் படவுள்ளது.

இ.போ.ச. பேருந்துகளின் தொகையை ஏழாயிரமாக அதிகரிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார். (அ-2)

# ஐ.தே.க. இருபது தேர்தல்களில் தோல்வி; விசாரணை வேண்டும்

## சஜித் வலியுறுத்து

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த காலங்களில் இருபது தேர்தல்களில் தோல்வியடைந்திருப்பதாகவும் அது தொடர்பில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச கோரியுள்ளார்.

அதன் பின்னரே கட்சியின் செயற்பாட்டு ரீதியாக பங்களிப்பு வழங்கி வரும் உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்வோருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை. இந்நிலையில் எவ்வாறான ஒழுக்காற்று விசாரணை நடத்தினாலும் கட்சியின் வெற்றிக்காக பாடுபடப்போவதாக சஜித் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் எவருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டால் அதற்காக முழு அளவில் போராடப் போவதாகவும் அநீதியான முறையில் எவரேனும் பழிவாங்கப்படுவதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


பழிவாங்கும் எண்ணங்களை கைவிட்டு கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல அனைவரும் இணைந்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிடையே கேட்டுக்கொண்டார். (அ-2)

# கருணைக்கு பேதமில்லை



ஆன்மீகம் 13

எந்தவொரு கருவியாக இருந்தாலும், அது நாம் நினைத்தது போலவும், சொல்வது போலவும் செய்கிறபோதுதான் அது உபயோகமான கருவி. நாம் சொல்லும் விதமாக நடந்து கொள்ளவில்லையெனில், அது ஆபத்தான கருவி. இந்த மைக்ரோஃபோன் நான் பேசுவதை, சிறிது அதிகமான சத்தத்தோடு அனைவரும் கேட்குமாறு செய்கிறது. அப்படியில்லாமல், நான் ஏதோவொன்று கூறினால், அந்த மைக்ரோஃபோன் வேறு ஏதோ ஒன்று சொல்கிறதென்றால், இது உபயோகமான கருவியா?



பெற்றவர்கள் எய்ட்ஸ் ஆல் இறந்ததால் அநாதரவாக்கப்பட்ட பிள்ளைகளில் சிலர்

உங்கள் மனம் எதைச்செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அதைத்தான் உங்கள் மனம் செய்யவேண்டும். நீங்கள் கூறுவதை மற்றவர்கள் கேட்க மாட்டார்கள் ஆனால், உங்கள் மனமாவது, நீங்கள் சொல்வதைச் செய்ய வேண்டும், இல்லையா? உங்களுடைய மனம் நீங்கள் சொல்கிறபடி நடப்பதாக இருந்தால், உங்கள் மனதை பதற்றமாக, பயமாக வைத்துக் கொள்வீர்களா? அல்லது ஆனந்தமாக வைத்துக் கொள்வீர்களா? ஆனந்தமாகத்தானே வைத்துக் கொள்வீர்கள்! மனம் ஆனந்தமாக இருக்குமேயானால், உடல் நிச்சயமாக ஆரோக்கியமாகத்தான் இருக்கும்.

எனக்கு துன்பமாக, பயமாக இருக்கிறது என்பதெல்லாம் தேவையற்றது. அடிப்படையான பிரச்சினை என்னவென்றால், உங்கள் மனம் நீங்கள் சொல்வதைக் கேட்கவில்லை என்பது தான்.

இந்த உலகில் யாருமே .நீங்கள் சொல்வதை முழுமையாக கேட்க மாட்டார்கள். உங்கள் கணவனோ, மனைவியோ, குழந்தையோ நீங்கள் சொல்வதைக் கேட்கமாட்டார்கள். உங்கள் வீட்டு நாய்கூட, நீங்கள் சொன்னதைக் கேட்காது. அதன் விருப்பப்படி, அது ஏதேதோ செய்துகொள்கிறது. ஒரு வராவது, நீங்கள் சொல்கிறபடி 100% கேட்டு நடக்கிறார்களா? கேட்க மாட்டார்கள் ஆனால், உங்கள் மனமாவது நீங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும், இல்லையா? உங்கள் மனமே நீங்கள் சொல்வதைக் கேட்கவில்லையென்றால்,வேறுயார் நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள்? உங்கள் மனதை, சொல்வதைக் கேட்கும்படி செய்துவிட்டால், எது நடந்தாலும், வெளிச் சூழ்நிலை எப்படியிருந்தாலும், உடல் நிலை எப்படியிருந்தாலும் நம்மனதை நிச்சயமாக ஆனந்தமாகத்தான் வைத்துக் கொள்வோம். இப்படிப்பட்ட திறனை நம்முள் வளர்த்துக் கொள்ள வேண்டும். சைக்கிளோ, ஸ்கூட்டரோ, காரோ நாம் எங்கே செல்ல நினைக்கிறோமோ, அங்கே சென்றால்தான் அது நமக்கு உபயோகமானது. ஆனால், இங்கே போக ஓட்டினால், அது அங்கே போகிறதென்றால், அப்படிப்பட்ட வாகனத்தில் செல்வது பாதுகாப்பானதல்ல. நீங்கள் ஆனந்தமாக இருக்கவேண்டுமென நினைத்தால் உங்கள் மனம் பதற்றமாக இருக்கிறது; நீங்கள் உறங்க நினைத்தால், உங்கள் மனதில் பயம் வருகிறது. நீங்கள் நினைத்த விதமாக இல்லாமல் மனம் வேறு விதமாக போகிறது.

நினைத்த விதமாக மனம் நடக்க நாம் அதில் கவனம் செலுத்தியாக வேண்டும். யாருக்கும், ஏதுவும், தானாக வருவதில்லை. சிறிது கவனம் செலுத்தினால், அந்தந்த திறமையை நிச்சயம் சம்பாதிக்க முடியும். இதைத்தான் நாம் தியானமென்று சொல்கிறோம். தியானம் என்றால் நம்முடைய மனம், நாம் சொன்ன விதமாக நடப்பது. எப்போது, உங்கள் மனம் நீங்கள் சொல்லும் விதமாக நடக்கிறதோ, அப்போது தேவையில்லாத பாதிப்பு, பதற்றம், பயம் போன்றவற்றை உருவாக்கமாட்டீர்கள்.

உங்களுக்குள் இருக்கும் பாதிப்புக்களை நீங்கள்தான் உருவாக்குகிறீர்கள். வெளியில்பலவிதமான பாதிப்புக்கள் உள்ளன, உங்கள் உடலிலும் பாதிப்பு உள்ளது, உங்கள் மனதிலும் பாதிப்பை உருவாக்க தேவை ஏதுமில்லை. நம்முடைய மனதை சுகமாக வைத்திருந்தால், நிச்சயமாக நம்முடைய ஆரோக்கியத்தில் மிகப் பெரும் மாற்றத்தினைக் கொண்டுவர வாய்ப்பிருக்கிறது. இந்த சூழ்நிலை மலர் தியானம் என்கிற தன்மையை நம் வாழ்க்கையில் கொண்டு வரவேண்டும். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

---

04

# மலேசியா தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்களும் இதழ்களும்

முதல் நாடகம்

இவரது முதல் நாடகம் குமணன் இது மேடையிலும் நடிக்கப்பட்டது. இது தவிர்த்துப் பெரி.சிவனடியான் எழுதிய அவளுக்காக, ரெ.சண்முகம் எழுதிய தெய்வமகள், பிரேம்கமால் இயக்கிய ஆலமரம் முதலான நாடகங்களிலும் நடித்திருக்கிறார்.

எழுத்துத்துறை

மாணவர் எழுத்துப் பயிற்சிக்காகத் தொடங்கிய தமிழ் முரசு மாணவர் மணிமன்ற மலர் பின்னர், தனியே ஓர் அமைப்பையும் உருவாக்கியது. இவரும் இவரது நண்பர்களும் சேர்ந்து முதன்முதலில் மாணவர் "மணிமன்றம்" அமைப்பை உண்டாக்கினார்கள். பிறகு "இளைஞர் மணி மன்றமாக" மாற்றங்கண்டது. இந்தக் காலகட்டத்தில் தான் இவர் சொந்த முயற்சியாலும் ஆர்வத்தாலும் கவிதை படைக்கத் தொடங்கினார். அவரது கவியாசான் பனைக்குளம் புலவர் பண்டித் மு.அப்துல் மஜீது அவர்கள். இவருக்குத் தமிழ் போதித்த, மறைந்த கா.கு மாணிக்க முதலியார் அவர்கள், இவருக்கு கற்றுத்தந்த எழுத்தின் உச்சரிப்புத்தான் இவரை தெளிவாகவும் சுத்தமாகவும் பேசவைத்தது. இவரது புகழுக்கு இவர் தமிழைத் தெளிவாக உச்சரிக்கும் முறையும் ஒரு காரணமாகும்.

ஜனாப். மைதீன் சுல்தான்

பின்னாங்குப் பாக்குத்தீவில் 1941ஆம் ஆண்டு பிறந்த இவர், ஐம்பதுகளின் பிற்பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்தார். தொடர்ந்து இல்லாமல், அவ்வப்போது எழுதினாலும், அவை முத்திரை பதிக்கும் படைப்புக்களாக இருக்கும். மணி மன்றத்தோடு தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கும் இவர், தமிழ் முரசு மாணவர் மணி மன்ற மலரையே தனது எழுத்துக் கழகமாகக் கொண்டவர். இவரது முதற்படைப்பு 1969 ஆம் ஆண்டு மணிமன்ற மலரில் வெளியாயிற்று. இதுவரை நூற்றுக்கும் அதிகமான சிறு கதைகளையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் வானொலி நாடகங்களையும் படைத்திருக்கும் இவர் முன்பு இலக்கிய வட்டத்திலும் இப்போது கவிதைக்களத்திலும் ஓர் உறுப்பினர். பேரவைக் கவிதைகள் சிறுகதைப் போட்டியில் பல முறை

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

பரிசு பெற்றிருக்கும் இவர் மலேசிய வானொலியில் பணியாற்றிவருகிறார்.

பார்த்திட, பழகிட, பேசிட ஆளில்லை
கிழவியாய் போனேனடி -நான்
கிழவியாய் போனேனடி
குளவிபோல் பறந்து
குமரியாய் நிமிர்ந்து
குதித்தாடி மகிழ்ந்தேனடி-அன்று
குதித்தாடி மகிழ்ந்தேனடி
அழகிய நிலா முகம்
என்முகம் தானென்று
ஆனந்தம் கொண்டேனடி-இன்று
அசிங்கமாய் போனேனடி
கற்பனை உலகத்தைக்
கையிலே பிடித்தின்று
காலத்தைக் கழிப்போர்களே-எதிர்
காலத்தை அழிப்போர்களே
அற்புதப் பாட்டியை
அடையாளங் கண்டேனும்
அடக்கமாய் வாழுங்கடி..... வீண்
ஆர்பாட்டம் வேண்டாமடி

எழுத மறந்த வார்த்தைகள்
பயந்து பயந்து சாகவா?-உன்
பர்ர்வை பட்டுவேகவா?
நயந்து மெல்ல நெருங்கவா-உன்
நடுக்கம் பார்த்துச் சிரிக்கவா?
வியந்து புகழ்ந்த கதையெல்லாம்-
முளை
வெடித்து வராத விதைகளா?
வயது கடந்த பின்பு நீ-என்
வழிக்கு வந்தால் நட்டமே!
ஆய்ந்து பார்த்துப்பேசவா?-சில
அடுக்கு மொழிகளை வீசவா?
பாய்ந்து உன்னை அணைக்கவா?-
உன்
பதிலுக்காக நிற்கவா?
தேய்ந்த நெஞ்சால் இதற்குமேல்-
தமிழ்
தெரிந்து பேச முடியலே!
காய்ந்துபோன ஓலை நான்- தினம்
காற்றில் ஆடி மாய்கிறேன்!
பொழுது உனக்கு வலியோ?-என்
பொறுமை, விளக்கம் தரலியோ?
பழுது வந்து விழுந்ததோ?-சிறு
பாதை மாறிப்போனதோ?
எழுத மறந்த வார்த்தைகள்-சில
இருப்பதை நான் உணர்கிறேன்!
அழுது மட்டும் தீர்க்கிறேன்
அர்த்தம் உனக்கு விளங்குமோ?
-கடையநல்லூர் ஜமீலா, சிங்கப்பூர்

முடிவுரை

இலக்கிய வரலாறு என்பது ஓர் ஊற்றுக்கண். அதில் எப்போதும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். அந்த ஊற்றுக்கண் அடைபட்டால்தான் அதில் வரட்சி காணும் இலக்கியமும் அத்தகையது தான். ஓர் இனமும் மொழியும் இருக்கும் வரை இலக்கியம் படைக்கப்படும். அதற்கொரு வரலாறும் எழுதப்பெறும். மலேசிய மண்ணில் தமிழ் காலூன்றிப் பல நூற்றாண்டுகள் ஆகியிருப்பினும் உண்மையான வரலாற்றுக்காலம் ஒரு நூற்றாண்டுக்கும் சற்றே மிகுதியானது. இந்தக் கால கட்டங்களில் முகிழ்ந்த இலக்கியப் படைப்புக்களுக்கு ஒரு வரலாறு வேண்டுமென்பதன் சிறு முயற்சி தான் இந்தக் களஞ்சியம். இதில் காணப்பெறும் செய்திகள் ஒரு வட்டம்போலச் சுற்றிக்கொண்டே வரும். பழையவர்கள் இடத்தில புதியவர்களும், இன்று நடப்பிலிருக்கும் ஏடுகளுக்குப்பின் புதிய ஏடுகளும் தோன்றும். (முற்றும்)

கே.ஏ.ஜெஹபர் உசேன்
-தமிழ்நாடு

# பயங்கரவாதம் தொடர்பில் பிரான்ஸ் பொறுப்பற்ற தன்மையுடன் செயற்படுகிறது

## முத்திரை வெளியீடு குறித்து பீரிஸ் காட்டம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய படங்கள், இலச்சினைகளுடன் அஞ்சல் தலை வெளியிடப்பட்டுள்ளது குறித்து கொழும்பில் உள்ள பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்டின் றொபி - சானை நேற்று முன்தினம் சந்தித்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல் பீரீஸ் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிக்கும் ஒரு அமைப்பு இந்த அஞ்சல் தலைகளை வெளியிடுவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் அனுமதித்திருப்பது உலக பயங்கரவாதம் தொடர்பாக பிரான்ஸ் கையாளும் பொறுப்பற்ற கொள்கையை எடுத்துக் காட்டுவதாக பிரான்ஸ் தூதுவரிடம் வெளி விவகார அமைச்சர் பீரிஸ் விசனத்தை வெளியிட்டுள்ளார்.

அஞ்சல் தலைகள் புழக்கத்தில் இருந்து உடனடியாக விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுபோன்ற தீவிரவாத அமைப்புகள் நாடுகளிடையே இருந்து வரும் நட்புறவை சீர்குலைக்கும்முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் வெளிநாடுகளிலுள்ள உள்ள அரசாங்களுடன் புலம்பெயர்ந்து சென்ற மக்கள் தொடர்புகளை வைத்து இலங்கை பற்றிய தவறான கருத்தை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டி வருவதாகவும் ஜி.எல். பீரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

மேற்கு நாடுகள் இலங்கையின் நலனில் நம்பிக்கை வைத்து செயற்படுகின்றன என்ற உணர்வை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்கு அந்த நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது திட்டங்களை நிறைவேற்றும் முயற்சிகளில் தீவிரவாத குழுக்கள் மாற்று வழிகளில் ஈடுபட்டு வருவதாகவும் விடுதலைப் புலிகள் சார்பு அஞ்சல் தலைகளை உடனடியாக பிரான்ஸ் புழக்கத்தில் இருந்து விலக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரான்சில் உள்ள ஒரு நிறுவனம் அதற்கு விதிக்கப்பட்ட விதிமுறைகளை மீறி இந்த அஞ்சல் தலைகளை வெளியிட்டு இருப்பதாகவும் 360 அஞ்சல் தலைகளே வெளியிடப்பட்டதாகவும் இந்தச் சந்திப்பின் போது பிரான்ஸ் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இந்த அஞ்சல் தலைகள் பிரான்ஸ் அரசினால் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை என்று கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் நேற்றும் முன்தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பௌத்த வழிபாட்டு தலங்களை அரசாங்கம் உதாசீனம் செய்கிறது

## ரணில் குற்றச்சாட்டு

அநுராதபுர மஹாவிஹாரை சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாக ரணில் குறிப்பிட்டுள்ளார்.

பௌத்த வழிபாட்டுத் தலங்களை அரசாங்கம் உதாசீனம் செய்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேரவாத பௌத்தம் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி விஹாரை உள்ளிட்ட முக்கிய பௌத்ததலங்களைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற் கொண்டு நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தெளிவான திட்டமொன்றை வகுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# வீடமைப்புத் திட்டங்களின் போது முகாமைத்துவ சபை அவசியம்

## அமைச்சர் வீரவன்ச வலியுறுத்தல்

சகல வீடமைப்புத் திட்டங்களிலும் வீடமைப்பு முகாமைத்துவ சபை நிறுவப்படுதல் அவசியமாகும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

45 வருடங்களுக்கு முன் பொறளையில் நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் 25 இலட்சம் ரூபா செலவில் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வீடமைப்புத் திட்டம் அமைச்சர் விமல் வீரவன்சவினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்டது.

இவ் வைபவத்திற்கு பிரதம அதிதியாக அமைச்சர் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இந்த நாட்டிலுள்ள சகல வீடமைப்புத் திட்டங்களிலும் கட்டாயமாக வீடமைப்பு முகாமைத்துவ சபையொன்று இருத்தல் வேண்டும். தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களில் வாழும் மக்களது வீடமைப்பு பிரச்சினைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு காண்பதற்கும் இச்சபை அமைந்திருப்பது அவசியமாகும்.

வீடமைப்பு அமைச்சின் கீழுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் ஆதன மூலதன அதிகார சபைகளும் உள்ளன.

இச்சபைகள் ஊடாகவே வீட்டுத் திட்டங்களில் ஏற்படும் அடிப்படைப் பிரச்சினைகள் நாளாந்த பராமரிப்பு வேலைகளுக்கு அமைச்சு நிதிகளை ஒதுக்கிக் கொள்கின்றது.

ஆகவே வீடமைப்புத் தொகுதிகளில் வாழும் மக்கள் ஒன்றுசேர்ந்து வீடமைப்பு முகாமைத்துவ சங்கம் ஒன்றை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அச்சங்கங்களின் மூலம் அப்பகுதியில் எழும் பொதுப் பிரச்சினைகளை அமைச்சர்களையோ அல்லது அதிகார சபை அதிகாரிகளையோ சந்தித்துதீர்வு காண முடியும் என்றார். (அ-2)

# மௌலானாவின் கருத்தை நிராகரித்தது குவைத்

கிழக்கு வாழ் முஸ்லிம்களுக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய குவைத் அரசாங்கம் நிதியுதவிகளை வழங்கி வருவதாக அலவி மௌலானா குற்றம் சுமத்தியுள்ளார்.

சுப்பீ முஸ்லிம்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதற்கு இந்த நிதியுதவி வழங்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வாறு ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய பணம் வழங்கப்படவில்லை என. இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் பூசுப் அல்டாக்கீ தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களுக்காக மட்டும் குவைத் அரசாங்கம் நிதியுதவிகளை வழங்கவில்லை எனவும் நாட்டின் சகல நட்புறவான மக்களுக்கும் அவ் அரசாங்கம் உதவிகளை வழங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பரந்தன் -முல்லை வீதி புனரமைக்கப்படுகிறது

## கிளி.அரச அதிபர் தெரிவிப்பு



பரந்தன் -முல்லைத்தீவு வரையிலான ஏ-35 வீதி கடந்த 30 வருடங்களுக்கு பின்னர் புனரமைப்பு செய்யப்படுகின்றது. 5,700 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி முழுமையாக புனரமைக்கப்பட்டு வருகின்றது என கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யுத்த காலத்தின் போது மேற்படி ஏ35 வீதி முழுமையாக சேதத்துக்குள்ளாயிருந்தது. இந்நிலையில் நாட்டில் சமாதானம் நிலவியதை அடுத்து முல்லைதீவில் மீள் குடியேறிய பொதுமக்களின் போக்குவரத்து தேவைக்காக வீதியின் புனரமைப்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

பரந்தன் முதல் முல்லைத்தீவு வரையான ஏ-35 பிரதான வீதி, 52 கிலோமீற்றர் நீளமுடையதாகும். இந்நிலையில் இந்த வீதி 30 மாத காலப்பகுதிக்குள் முழுமையாக புனரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# புலிகளுக்கு ஆதரவானவர்கள் அமெ.வில் முத்திரை வெளியீடு

## திவயின தகவல்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள கே. மனோகரன் என்பவரின் மகனின் படம் பொறித்த முத்திரையை அமெரிக்காவில் உள்ள புலிகளுக்கு ஆதரவான இரண்டு அமைப்புக்கள் வெளியிட்டுள்ளன என திவயின கூறியுள்ளது.

இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்பு மற்றும் ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு என்ற இந்த இரண்டு அமைப்புக்கள் இணைந்து இந்த முத்திரையை வெளியிட்டுள்ளன.

இதற்கு அஞ்சல் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. அதேவேளை இனப்படுகொலைக்கு எதிரான தமிழர் அமைப்புக்கு நிதியுதவி வழங்குமாறு மனோகரன் புலம்பெயர் தமிழர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (அ-2)

## கழுத்து வெட்டப்பட்ட ஆணின் சடலம் மீட்பு

(கொத்மலை)

கொத்மலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பளை, நுவரெலியா வீதியில் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலமொன்று அண்மையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

25 தொடக்கம் 30 வயது மதிக்கத்தக்க நபரொருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 28 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பது தொடர்பில் விசேட திட்டம்

(கொழும்பு)

இந்தநிலையில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பது தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்கான விசேட திட்டம் ஒன்றை நேற்று தொடக்கம் செயற்படுத்தவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கொள்கைப் பிரகடனத்தில் அண்மையில் ஜனாதிபதி கையொப்பமிட்டதாக அவர் கூறியுள்ளார்.

இந்தக் கொள்கைப் பிரகடனத்தை நேற்று தொடக்கம் மாவட்டங்கள் மற்றும் கிராமங்கள் தோறும் எடுத்துச் சென்று மக்களுக்கு விளக்கமளித்து அவர்களின் கையொப்பங்களையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் அண்மைக்காலமாக தெளிவின்மை காரணமாக

### அனோமா திசாநாயக்க



நாளுக்கு நாள் பாதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் ஏனைய அமைப்புக்களையும் இணைத்துக்கொண்டு பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்து தரப்பினருக்கும் உள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களுடன் தொடர்புடைய வழக்குகளை மூன்று மாதங்களுக்குள் விசாரித்து முடிப்பதற்கான பரீட்சார்த்த திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், நீதி அமைச்சு, சட்ட மருத்துவத் திணைக்களம் ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மூன்று மாதங்களுக்குள் உரிய தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் சமூகத்தில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு முன்வருமாறு அனைவரிடமும் வேண்டுகோள் விடுப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம்

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஜனவரி மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 06.01.2012 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 09.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் பிராந்திய பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நன்றி

(சி-5430)

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள் பணிமனை, யாழ்ப்பாணம்.


## தாருஸ்மான் அறிக்கையை ஐ.தே.கட்சி நிராகரிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட தாருஸ்மான் தலைமையிலான குழுவினரின் இறுதி அறிக்கையை நிராகரிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் தாருஸ்மான் தலைமையிலான மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த அறிக்கையை நிராகரிப்பதாக அரசாங்கம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

அறிக்கை வெளியிடப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் ஐக்கிய தேசியக்கட்சி தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளியிடவில்லை.

குறித்த அறிக்கை தொடர்பில் ஆராய்வதாக முன்னாள் சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தரும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக ஆட்சி செய்த காலத்தில் அவரின் செயலாளராக கடமையாற்றிய பிரட்மன் வீரக்கோன் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தாருஸ்மான் அறிக்கையை நிராகரிப்பதாக தற்போது ஐக்கிய தேசியக்கட்சி அறிவித்துள்ளது.

பிரட்மன் வீரக்கோன் தலைமையிலான குழுவினர் அறிக்கை சமர்ப்பித்தார்களா என்பது பற்றி அறிவிக்கப்படாத நிலையில் அறிக்கையை நிராகரிப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தாருஸ்மான் அறிக்கை அரசாங்கத்தின் குழந்தை என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் லக்ஸ்மன் கிரியெல்ல போன்ற சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தாருஸ்மான் அறிக்கையின் சில விடயங்களை வரவேற்பதாக கடந்த காலங்களில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## குளவி கொட்டியதில் ஒருவர் நிலைமை கவலைக்கிடம்

(அப்புத்தளை)

அப்புத்தளை தொட்டுலாகலை பெருந்தோட்டத்தில் பெண்ணொருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அண்மையில் நடைபெற்றது. மேற்படி வயோதிபப்பெண் தியத்தலாவை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

நூற்றுக்கணக்கான குளவிகள் கொட்டியதால் வயோதிபப் பெண்ணின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## குறைந்த வயதுப் பெண்கள் மீதான வன்முறை சம்பவங்கள் அதிகரிப்பு

### குற்றவியல் பகுப்பாய்வு நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களில் சுமார் 90 சதவீதமானவை குறைந்த வயதுப் பெண்கள் மீது மேற்கொள்ளப்படுவதாக பொலிஸ் திணைக்களத்தின் குற்றவியல் பகுப்பாய்வு நிபுணர் மல்லவ வித்தானாரச்சி தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் 642 பாரிய குற்றச் செயல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர் இவற்றில் 24 வீதமானவை அதாவது 176 சம்பவங்கள் மாத்திரமே மனிதர்களுடன் தொடர்புபட்ட இச்செயல்கள் என்று குறிப்பிட்டார்.

நாட்டில் மனிதனால் மனிதனுக்கு செய்யப்படும் குற்றச் செயல்கள் குறைந்து காணப்படுகின்ற போதிலும் சொத்துக்கள் தொடர்பான குற்றச் செயல்கள் அதிகரித்து காணப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற குற்றவியல் தகவல் பகுப்பாய்வு மையம் திறந்து வைக்கும் நிகழ்வில் விசேட உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பதிவு செய்யப்பட்டுள்ள 176 மனிதர்கள் தொடர்பான குற்றச் செயல் சம்பவங்களில் 86 சம்பவங்கள் அதாவது 48 வீதமானவை கற்பழிப்பு சம்பவங்களாகும்.

ஏனையவை காயப்படுத்தல், தாக்குதல் மற்றும் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புபட்டவையாகும்.

மனிதர்கள் மீதான குற்றச் செயல் சம்பவங்களில் கற்பழிப்பு சம்பவங்களே இடம்பெறுகின்றன. அதில் 89 வீதமானவை குறைந்த வயதுடைய பெண்கள் மீது மேற்கொள்ளப்படுபவையாகும்.

குறைந்த வயதுடைய பெண்கள் மீதான கற்பழிப்பு சம்பவங்களுக்கு காதல் தொடர்புகள், கண்காணிப்பு இன்மை, பகல் நேரங்களில் வீடுகளில் தனித்து இருத்தல் மற்றும் பெற்றோர் இருவரும் தொழிலுக்குச் செல்லுதல் போன்றவைகளே காரணங்களாகும் என்று அவர் குறிப்பிட்டார். (அ-2)


சாவகச்சேரியில்
20% தள்ளுபடியுடன்
மாபெரும்
மலிவு விற்பனை
இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
பெண்களுக்கான அழகிய சல்வார், சாறி, கொட்டன் சாறிகள்
சிறுவர்களுக்கான ஆடைகள்

மரியம்'ஸ்

பெண்களுக்கான பெருமை மிகுந்த ஆடையகம்

இடம் : "கலா காமெண்ட்"
16A, கண்டி வீதி, சாவகச்சேரி. (கொமஸியல் வங்கி அருகில்)
திகதி : 01.01.2012-14.01.2012 வரை
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை
அநேகரின் வேண்டுகோளிற்கிணங்க தைப்பொங்கல் வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
5000/= இற்கு அதிகமாக கொள்முதல் செய்தால்
800/= பெறுமதியான அழகிய With பிளஸ் கொட்டன் சாறி Free
தொடர்புகளுக்கு : 0777140844, 0718034848 (சி-5432)

# தமிழக முதல்வரின் அதிர்ச்சி வைத்தியம்..!

# கட்சித் தொண்டர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில்!

மூன்றாவது முறையாக முதலமைச்சரான ஜெயலலிதா தன்னை முற்றுகையிட்டிருந்த "அதிகார மையத்தை" தகர்த்தெறிந்திருக்கிறார். உடன் பிறவா சகோதரி என்று அனைவராலும் சொல்லப்பட்ட சசிகலா- முதலமைச்சரின் இல்லமான **போயஸ்** கார்டினிலிருந்து அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளார். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தில் (அ.தி.மு.க.) தமிழகம் முழுதும் வெவ்வேறு மண்டலங்களின் பொறுப்பில் இருந்த சசிகலாவின் உறவினர்களான இராவணன், எஞ்சினியர் கலியப்பெருமாள் போன்றோர் விலக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். இது மட்டுமன்றி சசிகலாவின் கணவர் எம்.நடராஜன், மற்ற சொந்தங்களான மகாதேவன், டாக்டர் வெங்கடேஷ், இளவரசி, அனுராதா, திவாகரன், பாஸ்கரன் என்று இப்படி நீக்கப்பட்டோரின் பட்டியல் தினமும் நீண்டுகொண்டே போகிறது. முதல்வரின் இல்லத்தில் அதிகாரம் செலுத்திய சசிகலாவில் ஆரம்பித்து, கடைக்கோடியில் அவரது சொந்தக்காரராக இருந்த யூனியன் சேர்மன் வரை நீக்கி



### தமிழகப் பார்வை

**அதிர்ச்சி வைத்தியம்** கொடுத்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. சூழ்ச்சிகள் பெரும் சுனாமியில் சிக்கிச்சிதறிப்போய்விட்டன என்ற ஆனந்தத்தில் ஒட்டுமொத்த தமிழக அரசின் நிர்வாக அமைப்பும், கட்சியின் தொண்டர்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் மோனோரயில் கொன்ராக்ட் வழங்குவதில் ஏற்பட்ட மோதல் குஜராத் முதல்வர் நரேந்திரமோடி வரை போன காரணத்தால் "எப்படி பிளக் லிஸ்ட் பண்ணப்பட்ட நிறுவனத்திற்கு கொன்ராக்ட் வழங்கினீர்கள்" என்று கேள்வி எழுப்பினார். முதல்வர் ஜெயலலிதா. இது தொடர்பான விசாரணையில் முதல்வருக்குத் தெரியாமலேயே அதிகாரிகளுக்கு சசிகலா உத்தரவுகளை பிறப்பிக்கிறார் என்ற பயங்கரத் தகவல் தெரியவந்தது. சமீபத்தில் பெங்களூரில் நடைபெறும் சொத்துக் குவிப்பு வழக்கில் ஆஜரான முதல்வர் ஜெயலலிதா, "நான் கம்பனியில் ஒரு ஸ்லீப்பிங் பார்ட்னர் தான். சொத்துக்கள் வாங்கப்பட்டது குறித்து எனக்குத்தெரியாது என்று நீதிபதி மல்லிகார்ஜுனையா முன்பு கூறியிருந்தார். தன்மீதான சொத்துக்குவிப்பு வழக்கிற்கும் தனக்கும் சம்பந்தமில்லையென்பது அவரது வாதம். ஆனால், அடுத்து ஆஜராகி "முதல்வர் சொன்னது சரிதான். நாங்கள்தான் சொத்துக்களை வாங்கினோம். அவருக்குத் தெரியாது" என்று கூறியிருக்க வேண்டிய சசிகலா, பெங்களூர் நீதிமன்றத்தில் வழக்கின் கேள்விகளை தமிழில் மொழிபெயர்த்துத் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். வழக்கைத் தள்ளிப் போட்டு தன் தலைக்கு மேல் சொத்துக் குவிப்பு வழக்கு என்ற கத்தி எப்போதும் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்ற ரீதியில் வியூகம் வகுக்கிறார் சசிகலா என்று நினைத்தார் முதல்வர் ஜெயலலிதா. இப்படிக் கோரிக்கை வைத்த விடயம் முதல்வருக்கு கோபத்தை ஏற்படுத்தியது என்று கூறும் ஒரு வழக்கறிஞர் "தன்னை முழுமனத்துடன் ஆதரிக்கத் தயங்கும் சசிகலாவை தன் வீட்டில் ஏன் தங்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் முதல்வருக்கு வந்ததும் சசிகலாவின் வெளியேற்றத்திற்கு காரணம்" என்கிறார்கள். பல ஐ.ஏ.எஸ் ஐ.பி.எஸ் போஸ்டிங்குகளில் சசிகலா மூக்கை நுழைத்தது அதிகார வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியது. முதல் நாள் நியமிக்கப்பட்ட மறுநாள் மாற்றம் செய்யப்பட்ட ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். இதனால் தலைமைச் செயலாளர் திபேந்திரநாத் சாரங்கி,டி.ஜி.பி. இராமானுஜம் ஆகியோர் சசிகலாவின் குறுக்கீடுகள் குறித்து முதல்வருக்கு முறைப்பாடு செய்தார்கள்.

ஏற்கனவே ஒருமுறை ஜெயலலிதா முதல்வராக இருந்த போது சசிகலா மற்றும் அவரது ஆதரவாளர்களின் ஆதிக்கம் இருக்கத்தான் செய்தது. ஆனால், முதல்முறை *(1991-1996)* இல் இருந்தது போன்ற ஆதிக்கம் இரண்டாவது முறை *(2001-2006)* இல் இல்லை. இந்தமுறை எல்லாவற்றையும் மிஞ்சும் வகையில் ஆட்சி அதிகாரம், கட்சி அதிகாரம் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் சசிகலாவின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. அதிகாரிகளும் அமைச்சர்களும் முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவை நிறைவேற்றுவதற்கு பதில் சசிகலா சொல்வதைக் கேட்டாலே போதும் என்றநிலை உருவானது. இந்நிலையில் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் ஆஜராகப் போன சசிகலா, முன்பே விலக்கி வைக்கப்பட்ட வளர்ப்பு மகன் சுதாகரனுடன் சகஜமாகப் பேசினார். நீதிமன்றத்துக்குள்கூட ஒரு புறம் சசிகலா இன்னொரு புறம் இளவரசி. இவர்களுக்கு இடையில் சுதாகரன் என்று அமர்ந்து கொண்டனர். அந்த அளவிற்கு "இவர்கள் நம் சொந்தக்காரர்கள்" என்ற மனப்பான்மையுடன் சசிகலா கோர்ட்டில் நடந்து கொண்டாராம். இத்துடன் இல்லாமல் அடுத்தநாள் விசாரணைக்காக பெங்களூரிலேயே தங்கியிருக்க நேர்ந்த சசிகலா, தனது குடும்பத்தாருடன் ஆலோசனை நடத்தி "நமக்கு 65 எம்.எல்.ஏக்கள் இருக்கிறார்கள். இந்த முறை சொத்துக்குவிப்பு வழக்கில் அம்மா (ஜெயலலிதா) மீதான குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்றால் நம் சொந்தத்தில் ஒருவரே முதல்வராக வரவேண்டும். என் கணவரே (எம்.நடராஜன்) முதல்வராக வந்தாற்கூட எனக்கு சந்தோஷம் தான்" என்ற ரீதியில் பேசியதாகவும், அந்தப் பதிவு செய்யப்பட்ட உரையாடல் அப்படியே முதல்வர் ஜெயலலிதாவின் கைக்கு கிடைத்ததாகவும் தகவல் இறக்கை கட்டிப்பறந்தது. இது தொடர்பாக கார்டனில் நடைபெற்ற விசாரணையில் சசிகலாவிற்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கும் உச்சக்கட்ட மோதல். 38 வருடங்களாக தனக்கு நண்பியாக இருக்கும் சசிகலா தன் முதலமைச்சர் பதவிக்கே குறி வைக்கிறார் என்பதை முதல்வர் ஜெயலலிதாவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. "இது பெரும் நம்பிக்கைத் துரோகம்" என்று கருதிய முதல்வர் ஜெயலலிதா-சசிகலாவை போயஸ் கார்டனிலிருந்து வெளியேற்றினார். ஒரு காலத்தில் முதல்வருக்கு கேஸற் கொடுப்பவராக போயஸ் தோட்டத்திற்குள் நுழைந்து, பிறகு ஜே.ஜே.டி.வி. யின் நிர்வாக தலைவராகவும், அ.தி.மு.வின் செயற்குழு உறுப்பினருமாகவே நியமிக்கப்பட்டு அதிகாரம் செலுத்தி வந்த சசிகலா, இப்போது அவரது உறவினர் பாஸ்கரனின் சென்னை அருகில் உள்ள நீலாங்கரை இல்லத்தில் தங்கியிருப்பதாக தகவல்.

இன்று அல்ல! எம்.ஜி.ஆர் மறைவிற்குப் பிறகு அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் ஆனதிலிருந்து சசிகலாவின் குடும்பத்தினருக்கு பதவி கொடுப்பதும், பிறகு எடுப்பதும் என்ற பாணியையே கடைப்பிடித்து வந்தார் முதல்வர் ஜெயலலிதா. முதன் முதலில் சசிகலாவின் கணவர் எம்.நடராஜனுடன் கட்சியினர் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்று 1991 ஆம் ஆண்டளவிலேயே அறிக்கை விடுத்தார். பிறகு சசிகலாவின் அக்காள் மகன்கள் டி.டி.வி. தினகரன், பாஸ்கரன், அண்ணன் மகன் மகாதேவன், இன்னொரு அண்ணன் மகன் டாக்டர் வெங்கடேஷ் உள்ளிட்டோருக்கு பதவி கொடுத்தார். பிறகு பறித்தார். இவர்கள் அனைவருடனும் கட்சியினர் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடாது என்றும். அறிக்கைகள் விட்டார். தினகரனின் மனைவி அனுராதாவை ஜெயா ரி.வி.யின் மனேஜிங் டிரெக்டராக நியமித்தார். பிறகு விலக்கினார். வி.என்.சுதாகரனை வளர்ப்பு மகனாக அறிவித்து "மெகா" திருமணத்தையும் நடத்தி வைத்தார். அதன் பிறகு 1999 ஆம் ஆண்டளவில் "சுதாகரன் அ.தி.மு.க. உறுப்பினர் அல்ல. அவரை மீண்டும் கட்சியில் சேர்க்கும் எண்ணமும் இல்லை. அவரது அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ள நான் உதவும் பேச்சுக்கும் இடமில்லை. ஆகவே, சுதாகரனுடன் அ.தி.மு.க.வினர் யாரும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம், அவரை சந்திக்கவும் வேண்டாம்" என்று அறிக்கை விடுத்தார்.

(தொடரும்)

# பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களின் பணம் களவாடப்படுகின்றது

## பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு) —

அரசாங்கம் அபிவிருத்திக்கென ஒதுக்கும் பணத்தில் பாதியை கொள்ளையிட்டு மீதிப் பணதிலேயே அபிவிருத்தியை மேற்கொள்வதாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

கிராமப்பகுதிகளின் குளங்கள், தொழிற்சாலைகள்,பாதைகளை அமைக்க ஒதுக்கப்படும் பணத்தையே அரசாங்கம் களவாடுகின்றது. நாட்டு மக்களின் நலனுக்காக அபிவிருத்தி மேற்கொள்ளப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு பொய்யான வாக்குறுதியை அளித்து மக்களின் பணம் களவாடப்படுவதாகவும் அதனையே அபிவிருத்தி என அரசாங்கம் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு தனியார் வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் சென்று திரும்பிய போதே சரத் பொன்சேகா மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# 11.4 மில். மோசடி செய்த மாணவனை வெளிநாடு செல்வதை தடுக்க உத்தரவு

(கொழும்பு) —

இரத்தினக்கல் வியாபாரி ஒருவரிடம் 11.4 மில்லியன் ரூபாவை மோசடி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட ஜப்பானில் கல்வி பயிலும் இலங்கை மாணவன் ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுக்கும்படி குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு கொழும்பு கோட்டை நீதவான் நேற்று முன்திணம் உத்தர்விட்டார்.

உலக வர்த்தக நிலையத்திலுள்ள இரத்தினக்கல் ஆபரண விற்பனை நிலையமொன்றின் உரிமையாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் இம்மாணவன் தொடர்பாக முறைப்பாடொன்றை செய்துள்ளார். தனது தந்தை ஜப்பானுக்கு சென்றிருந்தபோது அவருடன் நட்பாகிய மேற்படி மாணவன் 11.4 மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக்கல் ஒன்றை ஜப்பானில் விற்றுத் தருவதாகக் கூறி அக்கல்லை பெற்றுச் சென்றதாகவும் ஆனால், அவர் திரும்பிவரவில்லை எனவும் மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவனை தொடர்பு கொள்ள முடியவில்லை எனக்கூரிய முறைப்பாட்டாளர் இம்மாணவன் தற்போது இலங்கையில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

இம்மாணவன் நாட்டை விட்டுச் செல்வதை த்டுக்க உத்தரவிடுமாறு நீதிமன்றத்தை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோரினர். அதையடுத்து குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதவான் கனிஷ்க விஜேரட்ன மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார். (அ-2)

# நுவரெலியாவில் கடும் குளிர்; மரக்கறி செய்கை பாதிப்பு

(கொழும்பு) —

நுவரெலியா மாவட்டத்தில் நிலவும் கடும் குளிர் காலநிலையால் மரக்கறி செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அநேகமான பிரதேசங்களில் இரவுவேளைகளில் கடும் குளிர்கால நிலையும் பகலில் கடும் வெப்பமும் நிலவுவதாக மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

புல்மேடுகள், மரக்கறிச் செய்கைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் அதிகாலை வேளையில் பனித் துளிகள் படர்ந்து காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

வழமைக்கு மாறாக தொடர்ச்சியாக பல நாட்களாக நிலவும் இந்தக் காலநிலை சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ள போதிலும் மரக்கறி வகைகளும் ஏனைய செய்கைகளும் கருகிப் போவதற்கு அது காரணமாக அமைவதாக மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில் தேயிலைத் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்கள் தமது கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மதுபோதையால் பரிதாப உயிரிழப்பு

(திருகோணமலை) —

திருகோணமலை, பாலையூற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம் பாலையூற்று திருகோணமலை பகுதியைச் சேர்ந்த விமல்ரோவி (வயது-43) எனத் தெரியவருகின்றது.

மது அருந்திவிட்டு புகையிரத தண்டவாளத்தில் போதையில் உறங்கிக்கொண்டிருந்த வேளையில் அதிகாலை சரக்கு புகையிரதத்தில் சிக்கிய நிலையில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தந்தையும் கூலித்தொழில் செய்து வருபவரென்றும் மனைவி மத்திய கிழக்கு நாட்டில் பணிபுரிவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர். சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்திசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# 2012.01 05 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1477-பேர்கண்டி இளவரசன் சார்ல்ஸ் கொல்லப்பட்டான். பேர்கண்டி பிரான்சின் பகுதியானது.

★ 1554-நெதர்லாந்தில் ஐன்ட்ஹோவென் என்ற இடத்தில் பரவிய தீயினால் 75 வீத வீடுகள் சேதமாகின.

★ 1655-கோ.சாய் என்பவர் ஜப்பானின் மன்னன் ஆனார்.

★ 1757-பிரான்சின் பதினைந்தாம் லூயி கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினான்.

★ 1781-அமெரிக்கப் புரட்சிப் போர்: வேர்ஜீனியாவில் ரிச்மண்ட் நகரம் பிரித்தானியக் கடற்படையினரால் தீக்கிரையாக்கப்பட்டது.

★ 1854-சான் பிரான்சிஸ்கோவில் நீராவிக் கப்பல் ஒன்று மூழ்கியதில் 300 பேர் உயிரிழந்தனர்.

★ 1896-வில்ஹெம் ரொண்ட்ஜென் ஒரு வகைக் கதிர்வீச்சைக் கண்டுபிடித்ததாக ஆஸ்திரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இது பின்னர் எக்ஸ்கதிர் எனப் பெயரிடப்பட்டது.

★ 1900-ஐரிஷ் தலைவர் ஜோன் எட்வர்ட் ரெட்மண்ட் பிரித்தானியாவின் ஆட்சிக்கெதிராகக் குரல் எழுப்பினார்.

★ 1905-யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான மோர்னிங் ஸ்டார் வாரப் பத்திரிகையாக பெரியளவில் வெளிவர ஆரம்பித்தது.

★ 1918-ஜேர்மன் தொழிலாளர்களின் அமைதிக்கான சுதந்திரக் குழு (நாசிக் கட்சி) அமைக்கப்பட்டது.

★ 1933-கோல்டன் கேட் பாலத்தின் கட்டுமானப் பணிகள் சான் பிரான்சிஸ்கோவில் ஆரம்பித்தது.

★ 1940-பண்பலை வானொலி (எவ்.எம்) முதற்தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.

★ 1945-போலந்தின் புதிய சோவியத் சார்பு அரசை சோவியத் ஒன்றியம் அங்கீகரித்தது.

★ 1967-இலங்கை வானொலி இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1971-உலகின் முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மெல்போர்னில் நடைபெற்றது.

★ 1972-விண்ணோடத் திட்டத்தை முன்னெடுக்க அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் உத்தரவிட்டார்.

★ 1974-பெருவின் தலைநகரான லிமாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தினால் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. 6 பேர் உயிரிழந்தனர்.

★ 1975-தாஸ்மானியாவில் டாஸ்மான் பாலத்தில் சரக்குக் கப்பல் ஒன்று மோதியதில் 12 பேர் உயிரிழந்தனர்.

★ 1976-கம்போடியா ஜனநாயகக் கம்பூச்சியா என கெமர் ரூச் அரசினால் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1984-ரிச்சர்ட் ஸ்டோல்மன் குனூ இயங்குதளத்தை உருவாக்கத் ஆரம்பித்தார்.

★ 1997-ரஷ்யப் படைகள் செச்சினியாவில் இருந்து வெளியேறின.

★ 2000-இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர் குமார்பொன்னம் பலம் கொழும்பில் கொலைசெய்யப்பட்டார்.

★ 2005-ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த மைக்கல் பிரவுண் தலைமையிலான வானியல் ஆராய்ச்சிக் குழுவினர் சூரியக் குடும்பத்தில் ஏரிஸ் என்ற புதிய குறுங்கோள் (dwarf plaet) ஒன்றைக் கண்டுபிடித்தனர்.

### பிறப்புக்கள்

★ 1592-ஷாஜஹான், மொகாலயப் பேரரசர் (இ.1666)

★ 1846-ருடோல்ஃப் இயூக்கென், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய எழுத்தாளர் (இ.1926)

★ 1874-ஜோசப் ஏர்லாங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1965)

★ 1902-ரா.கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (இ.1973)

★ 1926-ஜே.பி.ஜெயரத்தினம், சிங்கப்பூர் அரசியல்வாதி (இ.2008)

★ 1927-சிவாய சுப்ரமணியசுவாமி, இந்து அமெரிக்க ஆன்மீகவாதி (இ.2001)

★ 1928-சுல்பிக்கார் அலி பூட்டோ, பாகிஸ்தானின் ஜனாதிபதி (இ.1979)

★ 1932-உமபேர்டோ ஈக்கோ, இத்தாலிய எழுத்தாளர்

★ 1937-சித்தி அமரசிங்கம், ஈழத்துக் கலைஞர், பதிப்பாளர் (இ.2007)

★ 1938-நுகுகி வாதியங்கோ, கென்ய எழுத்தாளர்

### இறப்புக்கள்

★ 1933-கால்வின் கூலிட்ஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30 ஆவது குடியரசுத் தலைவர் (பி.1872)

★ 1970-மாக்ஸ் போர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய இயற்பியலாளர் (பி.1882)

★ 1981-ஹரோல்ட் உரே, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி.1893)



★ 2000-இலங்கை தமிழ் அரசியல் தலைவரான குமார் பொன்னம் பலத்தின் நினைவு தினம்.

# அப்பாவிகளை கடத்திக்கொல்வதை நிறுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளோம்-தாரிக் இ தலிபான் அமைப்பு

பாகிஸ்தான் இராணுவத்தை தாக்க வேண்டாம் என தலிபான் தலைவர் முல்லா ஓமர் உத்தரவிட்டதாக வந்த செய்தியை பாகிஸ்தானி தலிபான் மறுத்துள்ளது.

தலிபான் தலைவர் முல்லா ஓமரின் வழிகாட்டுதலின் படி தலிபான்களின் மூன்று முக்கிய பிரிவுகள் ஒருங்கிணைந்து ஐந்து பேர் கொண்ட குழுவொன்றை அமைத்துள்ளனர். இந்தக் குழுவுக்கு அறிவுரை கூறிய முல்லா ஓமர் பாக் இராணுவத்தைக் தாக்க வேண்டாம். அமெரிக்க நேட்டோ படைகளைத் தாக்குங்கள் என உத்தரவிட்டதாக நேற்று முன்தினம் செய்திகள் வெளியாகின. இதற்கு தாரிக் இ தலிபான் பாகிஸ்தான் என்ற பாகிஸ்தானி தலிபான் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் எசனுல்லா எசன் கூறியதாவது, மவுல்வி நஜிர் தலைமையிலான குழு, ஹபீஸ் குல் பகதூர் தலைமையிலான குழு மற்றும் ஆப்கானிஸ்தான் தலிபான் ஆகிய தலிபான்களில் மூன்று முக்கிய பிரிவுகள் ஒன்றிணைந்து ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது உண்மைதான். இந்த ஒப்பந்தத்தின்படி இனி அப்பாவிகளை கடத்தி கொல்வதை நிறுத்த ஒப்புக் கொண்டுள்ளோம்.ஆனால் பாக் .இராணுவம் மீதான தாக்குதல் களையோ தற்கொலைத்தாக்குதல்களையோ நிறுத்த ஒப்புக் கொள்ளவில்லை.ஹக்கீமுல்லா மெசூத் தலைமையிலான பாகிஸ்தானி தலிபான் அமைப்பு எவ்வித போர் நிறுத்தத்தை யும் அறிவிக்கவில்லை.பாக். மற்றும் ஆப்கானில் எங்கள் தாக்குதல்கள் தொடரும் என அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தலிபானுக்கும் பாக். இராணுவத்திற்கும் இடையிலான இரகசிய அமைதிப் பேச்சுவார்த்தை இறுதிக் கட்டத்தை, எட்டிவிட்டதாக பாக். அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், விரைவில் ஒப்பந்தம் உருவாக்கப்படும். கடந்த காலத்தைப் போல அல்லாமல் இப்போது மிகவும் கவனமாக இந்தப் பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது என்றார். (அ-2)



இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப்பகுதியின் ரமல்லாஹ் நகரில் ஆராய்ச்சி மையம் ஒன்று ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இதில் பலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் கலந்து கொண்டார்.

# பலத்த மழையுடன் கடும் புயல்

இங்கிலாந்து, ஸ்கொட்லாந்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பலத்த மழையுடன் கடும் புயல் வீசியது. மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளிக்கு 2 பேர் பலியானார்கள். புயலால் எழுந்த இராட்சத அலைகளில் சிக்கி ஆங்கிலக் கால்வாயில் சென்ற சரக்குக் கப்பல் ஆட்டம் கண்டது. அப்போது படுகாயமடைந்த கப்பல் சிப்பந்தி இறந் தார். மேலும் இரு ஊழியர்கள் காயம் அடைந்தனர். இங் கிலாந்து, ஸ்கொட்லாந்தில் பல்வேறு பகுதிகளில் மரங்கள் வேரோடு சரிந்தன. இவை வீதியிலும் புகையிரத பாதை களிலும் விழுந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. வீதிகளில் சென்ற வாகனங்களை புயல் தலைகீழாக புரட்டி போட்டது. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

துறைமுகங்கள் மூடப்பட்டன. கட்டடங்கள் இடிந்தன. நாள் முழுவதும் விடாமல் மழை பெய்ததால் மக்கள் கடும் அவதிக்கு ஆளானார்கள். புயலுக்கு பின்னர் மின்சாரம் இன்றி 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டி ருப்பதாக ஸ்கொட்லாந்து அரசு தெரிவித்துள்ளது. புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (அ-2)

# அமெரிக்க போர்க்கப்பல்கள் மீண்டும் பாரசீகவளைகுடா பக்கம் வரக்கூடாது


## ஈரான் எச்சரிக்கை

(டெஹ்ரான்)

ஹோர்முஸ் நீரிணை வழியாக ஓமன் வளைகுடாவுக் குச் சென்றுள்ள அமெரிக்காவின் போர்க்கப்பல் மீண்டும் பாரசீக வளைகுடா பக்கம் வரக் கூடாது என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாரசீக வளைகுடா மற்றும் ஓமன் வளைகுடாவுக்கு இடைப்பட்ட குறுகலான கடல் வழிப்பாதை ஹோர்முஸ் நீரிணை என அழைக்கப்படுகின்றது. இதன்வழியாக உலகின் 20 சதவீத எண்ணெய்க்கப்பல்கள் சென்று வருகின்றன.

ஈரான் மீது அமெரிக்கா சமீபத்தில் அடுத்தடுத்து பொருளாதாரத் தடைகளை விதித்ததை அடுத்து இந்த நீரிணையை மூடப்போவதாக ஈரான் மிரட்டியது. தொடர்ந்து அப்பகுதியில் கடந்த 10 நாட்களாக ஈரானின் கடற்படை போர் பயிற்சியில் ஈடுபட்டது.



### ஏவுகணைகள் சோதனை

இந்த பயிற்சியின் போது தரையில் இருந்து கடலில் உள்ள இலக்கைத் தாக்கும் காதர் ஏவுகணை, குறுகிய தூரம் சென்று தாக்கும் நாசர் ஏவுகணை, தரையில் இருந்து தரையில் உள்ள இலக் கைத் தாக்கும் நூர் ஏவுகணை ஆகிய மூன்று ஏவுகணை களை வெற்றிகரமாக பரிசோதித்ததாக ஈரான் அறிவித்தது.

அதுபோல் அணுமின் நிலையங்களில் பயன்படுத் தப்படும் அணு எரிபொருள் கம்பிகளையும் உள்நாட்டு தொழில்நுட்பம் மூலம் தயாரித்து விட்டதாக தெரிவித்தது.

### ஈரான் எச்சரிக்கை

ஈரான் கடற்படை தனது 10 நாட்கள் போர் பயிற்சியை முடித்துக் கொண்ட பின் அந் நாட்டு இராணுவ உயர் அதிகாரி அடாவுல்லா சலேஹி நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில்,

இந்தப் பயிற்சி காரணமாகத்தான் அமெரிக்கக் கப் பல் நீரிணையைக் கடந்து சென்றது. இனிமேல் அந்தக் கப்பல் பாரசீக வளைகுடா பக்கம் வரக்கூடாது. இது குறித்து அமெரிக்காவுக்கு ஈரான் அறிவுரை, பரிந்துரை மற்றும் எச்சரிக்கை விடுகின்றது. ஏனெனில் மீண்டும் மீண்டும் இது குறித்து ஈரான் எச்சரிக்கை விடுக்காது என்றார்.

### பிரான்ஸ் பீதி

இதற்கிடையில் ஈரான் மீது அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடைகளைப் போல ஐரோப்பிய யூனியனும் இம் மாத இறுதிக்குள் விதிக்க வேண்டும் என பிரான்ஸ் கோரியுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் மாநாடு நடக்க உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யா ஆதரவு

ஈரானின் ஏவுகணைகள் பரிசோதனை முடிந்துவிட்ட நிலையில் முதன்முறையாக ரஷ்யா இது குறித்து விளக்கம் அளித்துள்ளது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு செய்தித் தொடர்பாளர் வாடிம் கோவல் நேற்று முன் தினம் அளித்த பேட்டியில்,

ஈரானிடம் கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கக் கூடிய ஏவுகணைகளைத் தயாரிக்கும் அளவுக்கு தொழில்நுட்பம் கிடையாது. இனி அது போன்ற ஏவுகணைகளை அந்நாடு எப்போதும் தயாரிக்கப் போவதில்லை என்றார். (அ-2)

# மசூதி இடிப்பிற்கு கடும் எதிர்ப்பு

சீனாவில் மசூதி இடிப்புக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஏற்பட்ட வன்முறையில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத் தியதில் 2 பேர் பலியாகினர். 50க்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்தனர்.சீனாவின் வடக்குப் பகுதியில் உள்ளது நின்ஜா ஹூய் நகரம். இங்குள்ள மசூதி ஒன்று சமீபத்தில் புதுப்பிக் கப்பட்டது.

இந்த மசூதி சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து மசூதி கட்டப்பட்டுள்ளது என்று கூறி அதை அகற்ற அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இதையடுத்து ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் துப்பாக்கிகளுடன் அங்கு குவிக்கப்பட்டு மசூதி இடிக்கப்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த நூற்றுக்கணக்கான உள்ளூர் முஸ்லிம்கள் போராட்டம் நடத்தினர்.அப்போது வன்முறை ஏற்பட்டது.பொலிஸ் அதிகாரிகள் கண்ணீர்ப்புகைக் குண்டு கள் வீசியும் தடியடி நடத்தியும் கும்பலை விரட்டினர். உயிர்ச் சேதம் எதுவும் இல்லை என்று பொலிஸார் திட்டவட்டமாக மறுத்தனர். (அ-2)




# தம் பண்பாடு மற்றும் கொள்கைகளை பரப்ப முயலும் மேற்குலகை சீனா அனுமதிக்காது - சீன ஜனாதிபதி



மேற்குலக நாடுகள் தங்கள் பண்பாடு மற்றும் கொள்கைகளைப் பரப்புவதன்மூலம் சீனா மீது ஆதிக்கம் செலுத்த நினைக்கின்றன. அதை சீனா அனுமதிக்காது என சீன ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ கூறியுள்ளார்.

கடந்தாண்டு ஒக்டோபரில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கான கொள்கை வடிவமைப்பு மாநாடு நடந்தது. அதில் சீன பண்பாட்டை கட்டிக்காப்பது, கட்சி மற்றும் மக்களின் கடமை என அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக அம்மாநாட்டில் பேசியதை சேர்த்து ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ எழுதிய கட்டுரை ஒன்று கட்சி இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அதில் அவர் எழுதியிருப்பதாவது, சர்வதேச விரோத சக்திகள் சீனாவை மேற்கத்தேய மயமாக்கி அதன்மூலம் துண்டாடலாம் எனக் கருதுகின்றன. அவை தமது ஊடுருவலுக்கு வாசலாக பண்பாடு மற்றும் கொள்கையைப் பயன்படுத்திக் கொள்கின்றன. கொள்கை ரீதியிலான இந்தப் போராட்டம் பற்றி நாம் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டும். சர்வதேச அளவில் சீனா தற்போது பலமாக இருப்பதைப் போன்று நமது பண்பாடும் சர்வதேச அளவிலான நமது செல்வாக்கும் அவ்வளவு பலமானதாக இல்லை.

ஆனால் சர்வதேச அளவிலான மேற்கத்தேய பண்பாடு மிகவும் வலுவாக இருக்கிறது. அதன் தாக்குதலை எதிர்கொள்ள சீனா தனது பண்பாட்டை கட்டிக்காக்க வேண்டும் என அவர் அதில் எழுதியுள்ளார். (அ-2)

# சுதந்திரதினத்தை முன்னிட்டு கைதிகள் சிலர் விடுவிப்பு-பர்மா



பர்மாவில் நேற்றைய தினம் சுதந்திர தினத்தை முன்னிட்டு அந்நாட்டு அரசு சில கைதி கள் விடுதலை செய்துள்ளது.

கருணை அடிப்படையில் சிலருக்கு சிறைத்தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ள தாகவும் மரணதண்டனைக் கைதிகளுக்கான தண்டனை ஆயுள்சிறைத்தண்டனையாக மாற்றப்படும் எனவும் அரசு ஊடகம் தகவல் வெளியிட் டுள்ளது.

நேற்றைய தினம் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்த பட்டியலில் முக்கியமான அரசியல் கைதிகள் எவரது பெயரும் இடம்பெறவில்லை.பர்மாவில் உள்ள எதிர்க்கட்சி இந்த விடுதலைப்பட்டியல் குறித்து அதிருப்தி வெளியிடடுள்ளது.

பர்மாவின் மனித உரிமை நிலைவரங்கள் மோசமாக இருப்பதாக கூறி அதனை தடைசெய்துள்ள பல மேற்கத்தைய நாடுகள் அதற்கான காரணங்களில் முக்கியமானதாக அரசியல் கைதிகளின் விவகாரத்தையும் வலியுறுத்தி வருகின்றன.

பல நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் உட்பட ஆயிரக்கணக்கான கைதிகள் கடந்த ஆண்டில் இரண்டு பொதுமன்னிப்புக்களின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தமிழ் தேசியத்தின் வீரமகன்



நான் ஒரு கிறிஸ்தவனா இருக்கட்டும், குமார் ஒரு இந்துவாக இருக்கட்டும், ஆண்டவரே நீரே வாழ்வின் தனித்துவமான மூலத்தோற்றுவாயாகவும், உச்ச நிலையாகவும் இருக்கின்றீர். உண்மையும் நீதியுமாய் இருக்கின்றீர்.

குமாருக்கு வாழ்வதற்கென நீர் வழங்கிய அறுபது ஆண்டுகளுக்காகவும் நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். 60 ஆண்டுகளாக இருக்கின்ற போதிலும் அவர் வாழ்வு உலகள்ாவ அகன்று அமைய நீர் அவரை ஆசீர்வதித்திருக்கிறீர். அவர் தனது அன்பை அனைத்துத் தமிழர்களாகிய எமக்காகவும் இடையறாது பரவச் செய்தார். உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஈழத்தில் வாழ்வோர், வெளியே வாழ்வோர் இன்று ஈழத்தில் வாழ்வோர், இனி மேல் வாழப் போவோர் என எல்லோருக்குமே குமார் தனது அன்பைப் பிரவாகித்து ஓடச் செய்தார். ஆண்டவரே, குமாரின் வாழ்வு துணிகரமான ஓர் சேவையாகும். அது ஏழைகளின் மீதும் துன்பப்படுவோர் மீதும் நீர் கொண்ட அன்புக்கு சொல்கின்றேன். ஆண்டவரே நீரே குமாரை இயக்கி இருக்கின்றீர். நீர் அளித்த அந்தப் பற்றுறுதியுடனும், உணர்ச்சியுடனும் தான் குமார் தனது எதிரிகளுக்கு முகங்கொடுத்தார். அதிகார பலத்துடனும் வல்லமையுடனும் இருந்தவர்களுக்குச் சவால் விடுத்தார். டிருக்கும்போது, குமார் உமக்கு முன்னால் தலை தாழ்த்து வளைந்து உமக்கு வணக்கஞ் செலுத்திக் கொண்டிருப்பார்!

அது தவிர ஒரு நாளின் வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் குமார் முன்னோக்கியோ, பின்னோக்கியோ வளைந்ததே கிடையாது. இங்கே தான் தனது ஒரு சான்றாக அமைந்தது.

**கருத்துக்களை அஞ்சாது தெரிவிக்கும் தமிழ்த் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 12 ஆவது நினைவு தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரமாக்கப்படுகின்றது.**

கொலை, பாலியல் வல்லுறவு, சித்திரவதை என்பவற்றுக்குப் பலியாகும் ஆயிரக்கணக்கானோரைப் பாதுகாப்பதற்கான வாழ்வாக அது அமைந்தது.

உண்மைக்கும் நீதிக்குமாகச் சேவையாற்ற எத்துணை ஆழமான பற்றுறுதியை குமார் கொண்டிருந்தார். அநீதிக்குப் பலியாகுபவர்களின் பாதுகாப்புக்காக குமார் தனது கல்விச் செல்வத்தையும் ஆளுமையையும் துணிவாகவும் புத்திசாதுரியமாகவும் பயன்படுத்தியதை வைத்து நான் நிச்சயமாகச் தமிழர்களாகிய எமக்கு நீதியைப் பெற்றுத் தரவேண்டும் என்ற குமாரின் வேணவாவும் உணர்ச்சியுமன்றோ உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுடைய இதயங்களைத் தொட்டுச் சென்றது.

ஆண்டவரே, குமார் ஒரு நம்பிக்கையுள்ள மனிதர். அவர் எப்போதும் உம்மீது தான் தங்கியிருப்பதை வெளிப்படுத்துவார்! ஒவ்வொரு காலைப் பொழுதுகளிலும், கறுவாத் தோட்டத்து உயர் குழாத்தினரும், பெருந்தகைகளும், உயர் தொழில் வல்லுநர்களும் தமது உயர்வான அலுவலகங்களை நோக்கிப் பயணித்துக் கொண் உணர்வுகளுக்காக முதுகெலும்புடன் வாழ்ந்த ஒரு தமிழனை நாம் காணிகின்றோம்! இவ்வாறான முதுகெலும்புள்ள ஒரு நம்பிக்கையாளனை அளித்ததற்காக நான் உமக்கு நன்றி கூறுகின்றேன்.

இயோசுபிரான் யூதாசினால் துரோகத்திற்காளானார். நன்றியற்ற அந்தச் சீடன் முப்பது வெள்ளிப் பணத்தினால் கவரப்பட்டு விட்டான். ஹிட்லர் தன்னை தூக்கிவிடுபவர்களையும் ஏன் தமது மௌனத்தால் மறைமுகமாக அவனுக்கு ஆதரவளித்த சமயத்தலைவர்களையும் கூடத் துணையாக வைத்திருந்தான்.

ஆனால், நாம் தெரிந்தோ தெரியாமலோ எமது மௌனத்தினால் உண்மையினதும், நீதியினதும் சமாதானத்தினதும் பாதைக்குத் துரோகம் இழைக்கக்கூடும். எனவே, ஆண்டவரே, நாம் எழுந்து நிற்கவும் இடித்துரைக்கவும் கூடியதாக எமது உதடுகளிலிருந்து பேச்சை வரவழையும்! எமது முதுகெலும்புகளுக்குச் சக்தியைக் கொடும்!

நீதிக்கும் உண்மைக்கும் விரும்பித் துரோகம் செய்யும் பலகோழைகளைத் தமிழினம் கொண்டிருப்பதற்குக் காரணம் உம்முடைய சாபமா?

இல்லையென்றுதான்நான் நம்புகின்றேன். ஏனெனில் நீரே எமக்கு ஒரு குமாரைத் தந்தீர்! நீரே எமக்கு ஒரு அச்சமற்ற தலைவரைத் தந்தீர்! தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் துணிந்து நின்ற உண்மையின் புதல்வனை நீரே எமக்குத் தந்தீர்! நிச்சயமாக, நீர் எம்மை நட்டாற்றில் அநாதையாகவிட்டுப்போவதில்லை! ஆண்டவரே! குமாரை நிரந்தரமாக மௌனத்திற்குள் தள்ளிய எதிரிகளையும், கோழைகளையும் நீர் மன்னித்தருளும்!

உயர்ந்து எழுகின்ற ஒரு தீச்சுவாலை குமாரது உடலத்தை ஆட்கொண்டது.

*ஆண்டவரே! அச்சுவாலையின் தகிப்பும் ஒளியும் முழுத் தமிழ் தேசத்தின் மேலாகவும் பரவட்டும். தமிழர்களுடைய குறிக்கோள்களைத் தழுவிப் பின்பற்றக் கூடிய தெளிந்த மெய்யறிவினை தாரும். உண்மைக்கும் நீதிக்குமாக குரல் கொடுக்கவும், நாம் நம்புகின்ற ஏதுக்களுக்காக எழுந்து நிற்கவும் கூடியவகையில் ஆண்டவரே, குமாருக்கு நீர் வழங்கிய அந்த உன்னதமான துணிச்சலில் ஒரு துளியையாவது எமக்குத் தந்தருளும்!*

எமது நினைவுகளில் மட்டுமன்றி, எமது வரலாற்றில் மட்டுமன்றி, ஈழத்தின் ஆத்மாவிலும் ஒவ்வொரு தமிழனது இதயத்திலும் எண்ணத்திலும் குமார் வாழ்ந்து கொண்டு இருப்பாராக!

தொகுப்பு-
க.மு.தர்மராசா

# சுற்றுலாப் பயணிகளை கவரும் நுவரெலியாவின் பனிப்பொழிவு

நுவரெலியாவின் சில பிரதேசங்களில் தற்போது ஏற்படும் பனிப்பொழிவை காண்பதற்காக அதிகளவிலான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு சென்று வருகின்றனர்.

கடந்த ஏழு நாட்களாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பனிப்பொழிவு காணப்பட்டதாக மாவட்ட செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.புல்மேடுகள், மரக்கறிச் செய்கைகள் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் அதிகாலை வேளையில் பனித்துளிகள் படர்ந்து காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

வழமைக்கு மாறாக தொடர்ச்சியாக பல நாட்களாக நிலவும் இந்த காலநிலை சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அமைந்துள்ள போதிலும் மரக்கறி வகைகளும் ஏனைய செய்கைகளும் கருகிப் போவதற்கு அது காரணமாக அமைவதாக மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் நுவரெலியாவின் பல பகுதிகளில் வெப்பநிலை ஏழு பாகை செல்சியஸ் வரை வீழ்ச்சியடைந்திருந்ததாக வளிமண்டளவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்னும் சில தினங்களில் அந்தப் பகுதிகளின் வெப்பநிலை படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என திணைக்களத்தின் பணிப்பாளர் எச்.எஸ்.காரியவசம் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மீள்குடியேறவுள்ள மக்களுக்கான அறிவித்தல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தண்ணிமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். மீள்குடியேற்றத்திற்கு சொந்த இடங்களுக்கு செல்ல விரும்பும் நண்பர்கள், உறவினர்களுடன் தங்கியுள்ள குடும்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு குமுளமுனை மகாவித்தியாலத்திற்கு மீள்குடியேற்ற ஆயத்தங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீளக்குடியேறவுள்ளவர்கள் தாங்கள் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு உதவி அரசாங்க அதிபரினால் மேல் ஒப்பமிடப்பட்ட விடுப்பு கடிதம் சமர்ப்பித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளு மாறு மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள் ளார். (அ)

## கூட்டம்

பூநகரி கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான நடப்பாண்டிற்கான முதலாவது கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது அதிபர்களுக் குரிய *செயலாற்றுகை ஒப்பந்தம்* இடம் பெறுவதால் சகல அதிபர்களை யும் கலந்துகொள்ளுமாறு பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். தர்மரத்தினம் அறிவித்துள்ளார். (அ-84)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# கலைப்பீடம்

**ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்**

Media Resource Training Center(MRTC)

**இதழியல் டிப்ளோமா(முழுநேரம்-இரண்டு ஆண்டுகள்)**

**கல்வி ஆண்டு -2012/2014**

Diploma in journalism-2012/2014

**புதிய கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற இதழியல் டிப்ளோமா இரண்டு ஆண்டு பயிற்சி நெறிக்கான 2012/2014 ஆண்டுக்கான, புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதற்கான அனுமதிக்காக தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்:க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

**பயிற்சி வழங்கப்படும் துறைகள்**

* அச்சு ஊடகம்
* இலத்திரனியல் ஊடகம்
* இணைய ஊடகம்

**பயிற்சிக்காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பயிற்சிகள்**

* செய்தித்தாள் மற்றும் சஞ்சிகை தயாரிப்பு
* றேடியோ மற்றும் ரி.வி நிகழ்ச்சிகள் தயாரித்தல்
* ஊடக நிறுவனங்களில் செயல்முறைப் பயிற்சி
* சர்வதேச விரிவுரையாளர்களால் நடத்தப்படும் செயல்முறைப் பயிற்சிகள்
* ஆவணப் படத்தயாரிப்பு

**அனுமதிக்கான தெரிவுமுறை: எழுத்துத்தேர்வும்(எழுத்துஆற்றல்,அறிக்கையிடும் திறன், மொழி ஆற்றல், சமூக அறிவு) நேர்முகத் தேர்வும்.**

**கற்கைநெறிக்காலம்:- 2 ஆண்டுகள் (முழு நேரம்)**

**கட்டணங்கள்**


| | |
|---|---|
| கற்கைநெறிக் கட்டணம் | ரூபா 20,000.00 |
| பதிவுக்கட்டணம் | ரூபா 750.00 |
| நூலக வைப்புப்பணம்(மீளளிக்கத்தக்கது) | ரூபா 750.00 |
| நூலக பயன்பாடு | ரூபா 1000.00 |
| மொத்தம் | 22,500.00 |

விண்ணப்பப் படிவங்கள் : விண்ணப்பப்படிவங்களை இல. 84,ஜும்மா பள்ளிவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ரூபா 100/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்திற்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதி:15.01.2012

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு தொலைபேசி இலக்கம்:0212229873

பதிவாளர்
29.12.2011. (சி-5372)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறையின் ஏற்பாட்டில் நேற்று விசேட கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி அனுசியா சத்தியசீலன் தலைமையுரையாற்றுவதையும் ஜப்பானிய பல்கலைக்கழகப் பேராசிரியர் ஃகிரோகோஃபுறுத் மற்றும் ஹற்றன் கல்விவலய விசேட கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி சாந்தி டோசன் ஆகியோர் கருத்துரை வழங்குவதையும் துணைவேந்தர் உள்ளிட்டோர் அமர்ந்திருப்போரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளின்)

# கிளிநொச்சியில் வள்ளம் கட்டும் தொழிற்சாலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கடற் தொழிலாளர்களின் நலன்கருதி பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஜெயபுரத்தில் வள்ளம் கட்டும் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐ.எல்.ஓ நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்சாலைக்கான பொருத்தமான இடமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமான பயிற்சி வழங்குவதற்கு ஆறு மீனவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த மீனவர்களின் வள்ளங்கள் மற்றும் உபகரணங்கள் சேதத்திற்குள்ளானது.

இதனால் மீள்குடியமர்த்தப்பட்ட மீனவர்களில் பெரும்பாலானவர்கள் தொழில் செய்வதற்கும் வள்ளம் இல்லாததனால் தொழிலின்றி கஷ்டப்படுகின்றார்கள்.

இந்த நிலையில் மீனவர்களின் நலன் கருதி வள்ளம் கட்டும் தொழிற்சாலையை அமைக்க முன்வந்துள்ள மேற்படி நிறுவனம் பூநகரிப் பிரதேசத்தில் ஜெயபுரத்தில் மன்னார் வீதிக்கருகாமையில் பொருத்தமான இடத்தை தெரிவு செய்துள்ளது.

அத்துடன் வள்ளம் கட்டுவது சம்பந்தமான பயிற்சி நெறிக்கு ஆறு மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கொழும்பிலுள்ள நில்மன்றீன் என்ற ஸ்தாபனத்தில் இவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சிக் காலத்தின் போது இவர்களுக்கு கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது.

ஜெயபுரத்தில் இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு குறைந்த விலையில் இலகு கடன் அடிப்படையிலும் வள்ளங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கமநல சேவை நிலையங்களுக்கு தூவல் நீர்ப்பாசன கருவிகள்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் பிரிவின் ஊடாக தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய முல்லை.மாவட்டத்தில் உள்ள எட்டு கமநல சேவை நிலையங்களுக்கு தூவல் நீர்ப்பாசனக் கருவிகள் வழங்கப்படவுள்ளதாக முல்லை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் உதவிப் பணிப்பாளர் றிட் நித்தியானந்தன் குலாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லை மாவட்ட விவசாயிகளின் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு நீர்ப்பாசனத்தில் நவீன முறைகளை கையாள்வதன்மூலம் நீர்ப் பயன்பாட்டில் சிக்கனத்தையும் செலவையும் குறைக்கமுடியும்.

இதற்காக தலா 20 இலட்சம் ரூபா பெறுமதியான 8 தூவல் நீர்ப்பாசன கருவிகளின் தொகுதிகள் வழங்குவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

# பிரிவுபசார விழா

(அச்சுவேலி)

பருத்தித்துறை பிரதேச செயலராக கடமையாற்றிய இ. வரதீஸ்வரன் கரவெட்டி பிரதேச செயலராக இடமாற்றம் பெற்று செல்வதனையிட்டு பருத்தித்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் பிரிவுபசார விழா இன்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. (அ-3-70)

# கணக்காளரை நியமிக்கக்கோரி மகஜர்கள் அனுப்பிவைப்பு

(மல்லாவி)

முல்லை மாவட்டத்தின் கீழுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலங்களிற்கு கணக்காளர் ஒருவர் இல்லாமையால் மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு தினசரி பணத்தை செலவு செய்தும் பேருந்துகளில் பயணம் செய்தும் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

இதனால் இச் செயலகங்களுக்கு ஒருவரை நியமித்து தருமாறும் மக்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முல்லை மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி ஆகியோருக்கு கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

முல்லை மாவட்ட செயலகத்திற்கும் துணுக்காய் மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்களுக்கும் இடையில் 60 கிலோ மீற்றர் தூரம் உள்ளது.

மக்கள் தினசரி தேவைக்காகவும் வாகன அனுமதிப்பத்திரம், பொது பரீட்சைக் கட்டணங்கள், பேருந்துகளின் வழி அனுமதிக் கட்டணங்கள் எனப் பலவற்றுக்குரிய கொடுப்பனவுகளை செலுத்துவதற்கும் அனுமதிச் சிட்டைகளை பெறவும் செல்லவேண்டியுள்ளது.

அத்துடன் மேற்குறித்த இரண்டு பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெறவும் முல்லை மாவட்ட செயலக்த்திற்கே செல்ல வேண்டியுள்ளது.

அதுமட்டுமின்றி கிராமசேவகர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்ட பொது வேலைகளுக்குரியவர்களும் செல்வதால் காலவிரயமும் பணவிரயமும் ஏற்படுவதோடு பிரயாண கஷ்டங்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே தற்பொழுது ஆரம்பிக்கப்படவுள்ள பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவு உபகாரியாலயத்துடன் கணக்காளர் ஒருவருடைய தலைமையின் கீழ் உபகாரியாலயம் ஒன்றை திறந்து வைத்து மேற்படி பிரதேச செயலகங்கள் இடையே தமக்குரிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-3-15)

# பெயர்ப்பலகை திரைநீக்கம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியில் புதிதாக அமைக்கப்பெற்ற பெயர்ப்பலகை நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு திரைநீக்கம் செய்யும் வைபவம் நடைபெறவுள்ளது என பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (அ)

# பேருந்து சேவை சீரின்மை; பாடசாலை சமூகம் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வினாசியோடை அ.த.க. பாடசாலை ஆசிரியர்களுக்கான போக்குவரத்து சீரின்றி காணப்படுகின்றது.

இப்பாடசாலையானது யாழ்.-மன்னார் (ஏ-32) வீதியிலுள்ள பரமன்கிராய் சந்தியில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வினாசியோடை கிராமத்தில் உள்ளது.

இக்கிராமத்திற்கு பேருந்து சேவை மாலை வேளை வந்து மீண்டும் மறுநாள் காலையே அங்கிருந்து செல்கின்றது. இதனால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இருந்து பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

சென்ற ஆண்டு ஜனவரி- பெப்ரவரி காலப்பகுதியில் பேருந்து சேவை நடத்தப்பட்டு பின்னர் அது நிறுத்தப்பட்டு விட்டது. இதனால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இது பற்றி கவனத்திற்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபர் எஸ் சிவசங்கர் கேட்டுள்ளார். (அ)

# பல்கலை மாணவர்கள் 7 பேருக்கு வகுப்பு தடை

அனுராதபுரம் ரஜரட்டை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஏழு பேருக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பகிடிவதை வழங்கிய சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டதாக பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கே.ஏ.நந்தசேன தெரிவித்துள்ளார்.

வகுப்புத்தடை விதிக்கப்பட்டவர்களில் மாணவி ஒருவரும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒழுக்காற்று குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

இன்று யோசியுங்கள். நாளைக்குப் பேசலாம்.
– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மகனே! குணதாச மீண்டும் குருதி ஆற்றை உருவாக்காதே!

இந்தியாவின் கிருஸ்ணா என்ன? அமெரிக்காவின் ஒபாமா வந்தாலும் அதிகாரப்பகிர்வுக்கு இடமில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

எந்தவிதமான அதிகாரமும் இல்லாத தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் அதிகாரப் பகிர்வைக் கொடுக்க முடியாது என்று கூறுவது பற்றி இவ்விடத்தில் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை ஆயினும்,

வயது முதிர்வும் அதன் வழி அனுபவமும் உடைய கலாநிதி குணதாச பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை வெளியிடுவது வேதனைக்குரியது.

கிருஸ்ணா என்ன ஒபாமா வந்தாலும் அதிகாரப்பகிர்வை கொடுக்க முடியாது என்று கூறுகின்ற குணதாச, இதனை போருக்கு முன்னர் கூறியிருப்பாராயின், ஒன்றில் போரில் இலங்கை அரசு வெற்றி பெற்றிருக்க முடியாது அல்லது கலாநிதி குணதாசவுக்கு இப்போது ஐந்தாறு நினைவுப் பேருரைகள் நடந்து முடிந்திருக்கும்.

என்னசெய்வது! உலகம் முழுவதிலும் இரந்து ஈட்டிய வெற்றிக்குப்பின் மார்தட்டல் நடக்கிறது.

எதுவாயினும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கூறுகின்ற கருத்துக்களைப் பார்க்கும்போது, தென்கச்சி கோ சுவாமிநாதனின் ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

தன் மகன் பொழுது விடிந்தும் நித்திரைவிட்டு எழாததைக் கண்ட தாய், மகனே பள்ளிக்கூடம் போக வேண்டும்; விரைவாக எழும்பு என்றார்.

அதற்கு நான், பள்ளிக்குப் போக மாட்டேன் என்று மகன் கூறுகின்றார்.

பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்கிறாயே! அதற்கு முக்கியமான காரணம் 2 கூறு பார்க்கலாம் என்றார் தாய்.

ஆசிரியர்களுக்கு என்னைப் பிடிக்கவில்லை. மாணவர்களுக்கும் என்னில் விருப்பமில்லை என்று பதிலளிக்கிறார் மகன்.

இதற்காக நீ பள்ளிக்கூடம் போகாமல் இருக்கலாமா என்ன? தாயின் கேள்வி இது.

தாயே! நான் பள்ளிக்கூடம் போகவேண்டும் என்பதற்கு முக்கியமான 2 காரணத்தை நீங்கள் கூறுங்கள் பார்க்கலாம் என்கிறார் மகன்.

தாய் சொல்கிறாள், மகனே இப்போது உனக்கு வயது 52. நீதான் அந்தப் பள்ளிக்கூடத்தின் பிறின்சிப்பல். ஆகையால், நீ பள்ளிக்குப் போகத்தான் வேண்டும்.

இப்படித்தான் குணதாசவின் நிலையும்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவருக்கும் அவரின் தாய்க்குமிடையே ஒரு சம்பாஷணை நடந்தால், எப்படி இருக்கும் இப்படி ஒரு கற்பனை.

மகனே! குணதாச, உனக்கு வயது 82. இன்னும் ஓரிரு வருடங்களில், உனக்கும் ஆறடி நிலம் ஒதுக்கப்படலாம். நிலைமை இப்படி இருக்கும்போது, ஏன் மகனே! இனவாதத்தை தூண்டி இந்த மண்ணில் மீண்டும் ஒரு குருதி ஆற்றை உருவாக்க நினைக்கிறாய்.

தாயே! நான் என்ன செய்வது? இப்படி ஏதும் கூறினால்தான் ஊடகங்கள் என்ர முகத்தைக் காட்டுகின்றன.

அரசின் ஆசீர்வாதமும் கிடைக்கிறது.

நானோ ஒரு பல்வைத்தியர். 82 வயதில் எப்படி மற்றவர்களின் பல்லைப் பிடுங்குவது? ஆகையால் சொல்லால்தான் நாட்டைக் குழப்ப முடியும்.

மகனே! நீ சொல்வது அவ்வளவு நல்லதல்ல. முன்னையவர்கள் விதைத்த பேரினவாதத் தீயை நீ மீண்டும் ஏற்றுகிறாய். உனது பேச்சை சிங்கள மக்கள் ஒரு பொருட்டாக நினைத்தால், ஆபத்து அவர்களுக்குத்தான். அதற்கான காலமும் தொலைவில் இல்லை.

# சுவர்க்கவாயில் ஏகாதசி



மார்கழி மாதத்தில் வரும் சுக்கில பட்ச ஏகாதசி, சுவர்க்கவாயில் ஏகாதசி, வைகுண்ட ஏகாதசி எனச் சிறப்பான விரத நன்நாள்களாக மோக்ஷதா என வழிபாடு செய்வார்கள். இந்த நாளிலேயே மகாவிஷ்ணு ஸ்ரீதேவி, பூதேவியுடன் யோக நித்திரையினின்று விழித்து உலகினை பாதுகாக்கின்றார். எனவே நாமும் இந்த நன்நாளில் மனத் தூய்மையுடன் பிறவி பிணி அகல கிருஷ்ண பரமாத்மாவை வழிபடுவது சிறப்பானதாகும்.

கண்ணபிரான் கீதையிலே மாதங்களில் நலன் மார்கழி என்று கூறினார். மிதமான சீதோஷ்ணமுள்ளதும் தேவர்களின் வைகரைப்பொழுதுமான மார்கழி திங்கள் மண்ணுலகத்தவர்க்கு இறைவழிபாட்டுக்கு உகந்த காலமாக போற்றப்படும் இம்மாதத்தில் வரும் ஏகாதசித் தினம் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது மகாவிஷ்ணு தோன்றி தேவர்களின் துன்பத்தை நீக்கி நல்லருள் புரிந்த நன்நாளாகவும் போற்றப்படும்.

மார்கழி மாதத்து திருவெம்பாவை திருப்பாவைக்காலமும்ஏகாதசி, துவாதசி தினங்களும் திருவாதிரைத் திருநாளும் அரியும் சிவனும் ஒன்றே என்பதை நமக்கு நன்குணர்ந்து வழிபாடு செய்வதற்குரிய பக்குவத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

மாதந்தோறும் வரும் ஏகாதசி விரத நாளாக அனுட்டிக்கப்பட்டாலும் மார்கழி ஏகாதசியே சுவர்க்க வாயில் ஏகாதசியென பெருமையுடன் கொண்டாடப்படுகின்றது.

## நீர்வைமணி

இதனை
பண்ணுவர் அமுதினை பருகிய
தினமென
எண்ணு சல் விரதமாம்
ஏகாதசிதனில்
கண்ணனைப் போற்றிடும்
கண்ணிய அடியவர்
புண்ணிய உலகினில் புகுவது
திண்ணமே

என வரும் பாடல் நன்குணர்த்துவதாகவுள்ளது.

# மருத்துவ தேவை கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டோர் விபரம்


தென்மராட்சி பிரதேசத்தில் நலிவுற்ற குடும்பங்களில் இருந்து மருத்துவ தேவைக்கான கொடுப்பனவுக்காக சமூக சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் 3 பயனாளிகளுக்கு கொடுப்பனவுக்கான அனுமதி சமூக சேவைகள் திணைக்களத்தினால் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதில் கணேசரத்தினம் சாருகன் சார்பாக க.இந்திராணி, செல்வராசா ரஞ்சிதம் சார்பாக செ.தனுசா, கணேசன் சறோசாதேவி ஆகிய மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை சகல ஆவணங்களுடனும் தென்மராட்சி பிரதேசசெயலக சமூகசேவைகள் பிரிவிற்கு வருகை தருமாறு தென்மராட்சி பிரதேச செயலாளர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார். (அ-3-29)

## திருவெம்பாவை 07



திருச்சிற்றம்பலம்

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் உருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்ப சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுது என்று
எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்நெஞ்சப் போதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

**தோழியர்:-** அம்மா! இவையும் உன் குணங்களில் ஒன்றோ! பலபல தேவர்கள் நினைத்தலுக்கும் அரியவனான செம்பொருளாம் பெருமானின் சின்னங்கள் கேட்ட மாத்திரத்திலேயே சிவ சிவ என்று சொல்வாய். தென்னாடுடைய பெருமான் என்று சொல்லி முடிப்பதற்குள்ளேயே தீயிலிட்ட மெழுகு போல உருகிவிடுவாய். எம்பெருமானை என்அரசே! இனிய அமுதம் போன்றவனே! என்று நாங்கள் எல்லோரும் பல்வேறு விதமாக சொல்கின்றோம். இன்னும் நீ தூங்குகிறாயோ! (உணர்வற்ற) கடுமையான நெஞ்சம் கொண்டவரைப் போல சிறு அசைவும் இன்றி கிடக்கிறாயே! தூக்கத்தின் தன்மைதான் என்னே!

உன்னல்-நினைத்தல், இருஞ்சீர்- மிக நேரியதன்மை, சின்னங்கள்- சிவச்சின்னங்கள் (சங்கு முதலான ஒலிகள்) அரையன் -மன்னன் வாளா-சும்மா பரிசு-தன்மை

(இன்று திருவெம்பாவை ஏழாம் நாள்)

## செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் விளையாட்டு பொறுப்பு ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அதிபர்கள் தங்கள் பாடசாலையில் விளையாட்டுக்கு பொறுப்பான ஆசிரியர் ஒருவரை தவறாது இச் செயலமர்வில் பங்குபற்ற அனுப்பி வைக்குமாறு துணுக்காய்கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)

## நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் 2011-2012 ஆம் ஆண்டிற்கான மேலதிக மொழிக் கற்கை நெறிக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களுக்கான நேர்முகத் தேர்வுக்குரிய கடிதத்தினை யாழ் மத்திய கல்லூரி பிரதி அதிபர் ப.பாலபவனிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் 0777703776 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறமுடியும் என யாழ். மத்திய கல்லூரி பிரதி அதிபர் ப.பாலபவன் அறிவித்துள்ளார். (அ)

## சத்திய தரிசனம்



### சொர்க்கம் இங்கேயே இருக்கிறது

நமக்கு கிடைப்பதைப் பிறருக்கும் கொடுக்கப்பழக வேண்டும். பிறருக்கு கொடுக்கவே இறைவன் நமக்கு கொடுத்திருக்கிறாார்.

இறைவனின் பெயரைச் சொல்லி அவருடைய புகழைப் பாடுவதுதான் பக்தி மார்க்கத்தின் சிறந்த செயல்.

நமக்குள் இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை இருந்தால் தான் நம்முடைய எண்ணங்களும்,செயல்களும் நல்ல விதமாக முடியும்.

சொர்க்கத்தை தேடிப்போக வேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றால் கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

நமக்கு எது வேண்டுமோ அதை இறைவனிடம் கேட்பதில் தவறில்லை.இறைவன் எங்களுடைய தகுதிக்க ஏற்ப கொடுத்தருளுவான்.

எனக்கு எல்லாம் நீயே. உன்னையே எனக்குக் கொடு என்று வேண்டிக் கொள்ளும் பக்தி மார்க்கம்தான் அனைத்தையும் விட சிறந்தது.

# 2012 புத்தாண்டு பலன்கள் உங்களுக்கு எப்படி? 09

## தனுசு



மூலம், பூராடம், உத்தி ராடம், 1 ஆம் பாதம்

**சராசரி மனிதனாகப் பிறந்து, சாதனையாளராகத் திகழும் தனுசு இராசி நேயர்களே!**

2012 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் வரை குருபகவான் பூர்வ புண்ய இராசியில் அமர்ந்து, இலாப ஸ்தானத்தில் இருக்கும் சனிபகவானை பார்வை செய்வதால் எதனையும் எதிர் கொள்ளும் தைரியத்தைப் பெறுவீர்கள். நண்பர்களுக்குள் இருந்த பிணக்குகளுக்கு சரியான தீர்வைக் காண்பீர்கள். சமூகத்தில் பிரபலமானவர் ஆவீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களிடம் சுமுகமாகப் பழகி அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வீர்கள். குடும்பத்திலும் வெளியிலும் உங்கள் மதிப்பு மரியாதை உயரும். எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். பதற்றமடையாமல் சாதனைகளைச் செய்வீர்கள். குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு சென்று மேற்படிப்பு படிக்கும் வாய்ப்பு கிடைக்கும். அரசாங்கத்தில் எதிர்பார்த்த சலுகைகளைப் பெறுவீர்கள். சிலருக்கு புதிய வீடு வாங்கிக் குடி பெயரும் யோகம் உண்டாகும். இந்த ஆண்டு மே மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் புதிய முயற்சிகள் அனைத்தும் நன்மையில் முடியும். வெளியில் கொடுத்திருந்த கடன் அனைத்தும் வட்டியுடன் திரும்பவும் கிடைக்கும். புனிதயாத்திரைகளை மேற்கொள்வீர்கள். மனதில் எழும் சிந்தனைகள் மூலம் பிறருக்கு நன்மை செய்வீர்கள். சகோதர, சகோதரிகளின் தேவைகளை புரிந்துகொண்டு அவர்கள் கேட்காமலேயே உதவிகளைச் செய்வீர்கள். ஆனாலும் மனதில் பட்டதை உடனே வெளிப்படுத்தாமல் சிறிது யோசித்துப் பேசினால் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

ஆகஸ்ட் மாதத்திலிருந்து உங்களின் தேகப் பொலிவு கூடும். பெரியோர்கள் நல்வழி காட்டுவார்கள். வருமானம் இருமடங்காகும். எதிர்கால வளத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். புதிய யுக்தியுடன் எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். தொட்டதற்கெல்லாம் பயந்து கொண்டிருந்த மனோபாவம் மாறி தைரியத்துடன் முடிவெடுப்பீர்கள். உங்களுக்குப் பிடிக்காதவர்களின் தனிப்பட்ட குணங்களை விமர்சிக்காமல் சுமுகமான உறவை வைத்துக் கொள்ளவும். சகோதர, சகோதரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் எந்தச் சுணக்கமும் காட்டாமல் இருந்தால் அவர்களும் இணக்கமாக நடந்து கொள்வார்கள். கடும் போட்டிகளுக்கு இடையே உங்கள் பெயர் முக்கியமான பொறுப்புக்குப் பரிந்துரைக்கப்படும். கிடப்பில் கிடந்த நல்ல திட்டங்களை மீண்டும் செயற்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும். புதிய நிலம், வீடு வாங்கும்போது வழக்கறிஞர்களின் வழிகாட்டுதல் படி நடக்கவும். உங்கள் இலட்சியங்களை அடையும் வரை அயராது உழைத்து வெற்றிபெறும் ஆண்டாக இது அமைகிறது.

உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத நிம்மதி கிடைக்கும் மேலதிகாரிகள் உங்கள் நலனில் அக்கறை செலுத்துவார்கள். சக ஊழியர்களும் உங்கள் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பார்கள்.

தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தவர்கள் குற்றமற்றவர் என்று நீருபணமாகி வேலையில் சேர்வார்கள்.

வியாபாரிகள் இலாபம் பெருகினாலும் கடும் போட்டிகளைச் சந்திக்க நேரிடும் அதனால், வாடிக்கையாளர்களிடம் நிதானமாகப் பேசவும். முதலீடுகளை, கூட்டாளிகளைக் கலந்தாலோசித்த பிறகே செய்யவும். வேகமாக விற்பனையாகும் பொருட்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வியாபாரம் செய்யவும்.

விவசாயத்தைப் பெருக்குவீர்கள். கடன் பிரச்சனை திடீரென்று முளைத்தாலும் அதை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சந்தையில் உங்கள் விளை பொருட்களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். விவசாயக் கூலிகளுக்கு உதவி செய்வீர்கள்.

அரசியல்வாதிகளுக்கு கட்சியில் புதிய பொறுப்புக்கள். கிடைக்கும் மேலிடம் உங்கள் மீது முழு நம்பிக்கை வைத்து சில பணிகளைக் கொடுக்கும். அவற்றைச் செவ்வனவே செய்து முடிப்பீர்கள் தொண்டர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்களின் திட்டங்களைச் சிரமமின்றி முடிப்பீர்கள் கட்சிப் பணிக்காக சில புதிய பயணங்களை மேற்கொள் வீர்கள்.

கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளைப் பெறுவீர்கள். புதிய பாணியில் திறமையை வெளிப்படுத்துவீர்கள். சக கலைஞர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். சந்தர்ப்பங்களைத் தவறவிடாமல் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு துறையில் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

பெண்மணிகளுக்கு கணவருடனான ஒற்றுமை நன்றாக இருக்கும் குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பீர்கள் உற்றார். உறவினர்களிடமிருந்து நல்ல செய்தி வந்து சேரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். தெய்வ பலம் கூடும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பணவரவு சீராகும்.

மாணவமணிகளே! படிப்பில் கவனம் சிதறாமல் இருக்கவும். பாடங்களை மனப்பாடம் செய்து படித்து நல்ல மதிப்பெண்களைப் பெற முயற்சிக்கவும். மற்றபடி பெற்றோர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

"ஜோதிடக் கலைமாமணி"
சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)

# கிளார்க் இரட்டைச்சதம்; ஆஸி. அணி முன்னிலை

## இந்திய பந்து வீச்சாளர்கள் சொதப்பல்



(சிட்னி)

மைக்கல் கிளார்க் இரட்டைச்சதமும் பொன்டிங் சதமும் அடித்து கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 482 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி நேற்றுமுன்தினம் சிட்னியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 191 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களை யுமிழந்தது.

இதில் அணித்தலைவர் தோனி ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் சச்சின் டெண்டுல்கர் 41, சேவாக் 30, ஹோலி 23 அஸ்வின் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பாக பட்டின்சன் 4 விக்கெட்டுக்களையும் ஹில்பென் ஹயூஸ், சிடில் தலா 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்றுமுன்தினம் முதல்நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 116 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு பொன்டிங்-கிளார்க் ஜோடி அபார ஆட்டத்தை வழங்கினர்.

இதில் கிளார்க் 60 பந்துகளிலும் பொன்டிங் 74 பந்துகளிலும் அரைச்சதத்தைப் பெற்றனர். இந்த ஜோடியைப் பிரிக்க அணித்தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்கவில்லை.

இதில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 136 பந்துகளில் தனது 18ஆவது டெஸ்ட் சதத்தைப்பூர்த்தி செய்ய அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.

மறுமுனையில் ரிக்கி பொன்டிங்கும் 150 பந்துகளில் தனது 40ஆவது டெஸ்ட் சதத்தை எட்டி அசத்தினார். இது பொன்டிங் நீண்ட இடவெளிக்குப்பின் பெற்ற டெஸ்ட் சதமாகும்.

இந்தஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 288 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது ரிக்கி பொன்டிங் 225 பந்துகளில் (14 பவுண்டரிகள் உட்பட) 134 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மைக்கல் ஹசி சிறப்பாக ஆட மறுமுனையில் கிளார்க் 233 பந்துகளில் 150 ஓட்டங்களை எட்டினார்.

இந்த ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி 400 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் அணித் தலைவர் மைக்கெல் கிளார்க் 284 பந்துகளில் தனது முதலாவது இரட்டைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

மறுமுனையில் ஹசி 70 பந்துகளில் அரைச்சதத்தைக் கடந்தார்.

இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 482 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 251 ஓட்டங்களையும் மைக்கல் ஹசி 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகீர்கான் 3 விக்கெட்டுக்களையும் இஷாந்த் சர்மா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும். இந் நிலையில் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 291 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

2012ஆம் கல்வி ஆண்டுக்கு தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசியக்கல்வியியற் கல்லூரியில் நடைபெற உள்ளதாக பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார்.

அவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அழைக்கப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**யாழ்ப்பாணம்**

சுகன்யா துரை-யாழ்ப்பாணம், மைத்திரஜீ பரமேஸ்வரன்-சுன்னாகம், சுதர்சிகா தனபாலன்-நீர்வேலி, சுவர்ணா ஜெயராஜன்-யாழ்ப்பாணம், சுதாகரன் தனுசான்-சங்கானை, மகிழினி குணசிங்கம்-கொடிகாமம், பூரணலிங்கம் ஜெசிந்தன்-நீர்வேலி, துரைராசா சுமதினி-யாழ்ப்பாணம், சுந்தரலிங்கம்-சுபதர்சன்-யாழ்ப்பாணம், ஜெனனி கந்தசாமி-அளவெட்டி மத்தி,

தனுஜா பரமேஸ்வரன்-உரும்பிராய், சுவந்தா ராஜேந்திரன்-கைதடி, இந்துஜா அழகராஷ்-யாழ்ப்பாணம், பிருந்தாபன்-யாழ்ப்பாணம், அஜந்தினி கிருபாகராமமூர்த்தி-சுன்னாகம், ஜெயராணி சிவபாத சுந்தரம்-திக்கம், பிரியந்தி தவராஜசிங்கம்-மல்லாகம், யாழ்ப்பாணம், ஜெசிக்காபனி பிரான்சிறொஜி ஜெயகுமார்-யாழ்ப்பாணம், கார்த்திகா சற்குணராஜா-வட்டுக்கோட்டை, சரண்யா கனகரத்தினம்-யாழ்ப்பாணம்,

ஆர்த்திகா ஜெயஸ்வரன்-கோண்டாவில், அன்ரன்ஜெயரட்ணம்மேரிபஸ்ரினாறொகானி-இளவாலை, சிறிராமச்சந்திரன் பிரசீலன்-கோண்டாவில், அகிலா கணேசலிங்கம்-கோப்பாய்வடக்கு, ஹசவாசினிவாசன்-புலோலி வடக்கு, ஜெயவீரசிங்கம் ஜெயசுகந்தினி-துன்னாலை மேற்கு, தர்மிலா பவானந்தன்-வண்ணார்பண்ணை, சிந்துஜா யோகராஜா-அராலி மத்தி, அருளம்பலம் கடோற்கஜன்-ஓட்டுமடம், அன்றொனீற்றீ ஜெஸ்லின் ஆனந்தராஜா-இளவாலை,

ராஜகுலேந்திரம்பிள்ளை செந்தில்நந்தன்-மானிப்பாய், துளசி முருகதாஸ்-கொக்குவில் கிழக்கு, கதிர்காம ஈஸ்வரன் செல்வதாஸ்-இணுவில், சுலக்ஷன் சத்தியமூர்த்தி-இடைக்காடு, கணேசமூர்த்தி அகிரன்-கோண்டாவில்,

**முல்லைத்தீவு**

ஜெயதீஸ்வரன் கீர்த்தனா-முள்ளியவளை, முருகேசு துசீலன்-சாவகச்சேரி, தவேந்திரன் குலலோஜினி-கோப்பாய், வல்லிபுரம்வினோதினி-ஒட்டிச்சுட்டான்,

**கிளிநொச்சி**

நிலானி செல்வரட்ணம்-உடுத்துறை, யோகராஜா அனுசுயந்தி-கரவெட்டி, பிரிந்திகா கெங்கேஸ்வரன்-வட்டக்கச்சி, சுந்தரலிங்கம் சர்மிளன்-பரந்தன், பரமநாதன் டினேஷ்-ஸ்கந்தபுரம். (எ-11)

# தென்னாபிரிக்கா பலம்

(கேப்டவுன்)

ஜக்கலிஸ் இரட்டைச்சதம் அடித்து அசத்த, தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இதில் முதல் இரண்டு போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒன்றில் வெற்றிபெற 1:1 என்ற கணக்கில் சமனிலை பெற்றது. இந் நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் கேப்டவுனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் டில்சான் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் ஆட்டநேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 347 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந் நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஜக்கலிஸ், டி வில்லியர்ஸ் அபார ஆட்டத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 580 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை நிறுத்தியது.

இதில் ஜக்கலிஸ் 325 பந்துகளில் (32 பவுண்டரிக்கள், ஒரு சிக்ஸர் உட்பட) 224 ஓட்டங்களையும் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 160 ஓட்டங்களையும் பீற்றர்சன் 109 ஓட்டங்களையும் றொடல்ப் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தம்பிக்க பிரசாத் 2 விக்கெட்டுக்களையும் வெலகெதர, ஹேரத் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந் நிலையில் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேரமுடியில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 149 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் 79 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 78 ஓட்டங்களை எடுத்தார். களத்தில் சங்கக்கார 35, மஹேல ஜெயவர்த்தனா 7 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காதுள்ளனர்.

இப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்று ஆகும்.

# பொன்சேகாவின்...

விட்டதாக அவர் தெரிவித்துள்ளார். ஆயினும், இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் பேசுவதற்கோ அல்லது மன்னிப்புக் கோருவதற்கோ தான் தயாராகவில்லை என சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா அறிவித்திருந்தார்.

இருந்தபோதிலும், சரத்பொன்சேகா அல்லது அவரது குடும்பத்தவர்கள் யாராவது மன்னிப்புக் கோரினால் மட்டுமே பொன்சேகாவை தன்னால் விடுதலை செய்யமுடியும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்கெனவே கூறியிருந்தார். ஜனாதிபதி கடந்த இரு மாதங்களாக டிரான் அலஸ், சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பில் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்நிலையில் ஜனவரி முதலாம் திகதி புத்தாண்டு பிறக்கும் போது சரத் பொன்சேகா விடுதலையாகலாம் என்ற தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், இது தொடர்பில் உருவாகிய சில சிக்கல்களையடுத்தே சரத் பொன்சேகாவின் விடுதலை சாத்தியமாகவில்லை. இப்பின்னணியிலேயே எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் சிலர்தான் சரத் பொன்சேகாவை விடுவிப்பதற்கான முயற்சிகளை குழப்பியதாக இப்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-5)

# மலசல...

வசதி, கழிவுகளை அகற்றும் முறை முதலான தகவல்களும் திரட்டப்படும் என தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நடவடிக்கையின் முதல் இரு கட்டங்களிலும் கிராம அலுவலகர் பிரிவு மட்டங்களில் உள்ள கட்டிடங்களின் விபரங்கள் திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது கட்ட நடவடிக்கை பெப்ரவரி 27 முதல் மார்ச் 19 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது மார்ச் 20,21 ஆம் திகதிகளில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படும். இவை தவிர, நிரந்தர வீடுகள் இல்லாத, திறந்த வெளிகளில் வசிப்போர் தொடர்பான கணக்கெடுப்பு மார்ச் 19ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ளது. (எ-5)

## போர்க் குற்ற ஆதாரத்தை...

இராணுவத் தலைவர்களை அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளோர் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் இந்தத் தகவல்களை அவர்கள் தமது முயற்சிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் உயர்மட்ட அரச அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வாய்மூல மற்றும் எழுத்து மூலமான போர்க் குற்றச் சாட்சியங்களை 20 ஆண்டுகளுக்கு வெளியிடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவிடம் 2 ஆயிரத்து 300 பேர்; 4 ஆயிரம் சாட்சியங்களை அளித்திருந்தனர். இந்த சாட்சியங்களையே அரசு பெற்றுக் கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது.

உயர்ந்தபட்ச இரகசியம் பேணப்படும் என்ற நம்பிக்கையிலேயே இந்த போர்க் குற்றச் சாட்சியங்கள் பெறப்பட்டன என்பதாலும் இவை பகிரங்கப்படுத்தப்பட்டால் சாட்சிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதாலும் இவற்றை 20 ஆண்டுகளுக்கு வெளியிடக் கூடாது என்று ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

ஆனால் உள்ளக விசாரணைக்கு இந்தச் சாட்சியங்கள் தேவை என்றுகூறி ஐ.நாவிடம் உள்ள இந்த ஆதாரங்களை அபகரிக்கும் முயற்சியில் இலங்கை இறங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐ.நாவிடமுள்ள இந்த போர்க் குற்ற ஆதாரங்கள் அரசின் கைகளில் சிக்கினால் போர்க்குற்ற சாட்சிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்.

அத்துடன் வருங்காலங்களில் உள்ளக அல்லது அனைத்துலக போர்க் குற்ற விசாரணைகளை நடத்தும்போது அதற்கு சாட்சியாக இருந்த எவரும் சாட்சியமளிக்க முன்வரமாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-5)

## வாள்வெட்டில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு இடம்பெற்ற வெவ்வேறு இரு மோதல் சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் (வயது 28), தாவடி கிழக்கைச் சேர்ந்த துசியந்தன் (வயது 18) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். படுகாயமடைந்த இருவரும் நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (எ-11)

## வலுவான நிலையில் புலிகள்...

நாட்டில் இனக் கலவரத்தை ஏற்படுத்தவும் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்கவும் தொடர்ந்தும் சில சக்திகள் முனைப்பு காட்டி வருகின்றனர் என்பதனை தொழில் சார் நிபுணர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிரிகளின் சவால்களை எதிர்நோக்க சகலரினதும் ஒத்துழைப்பு அவசியமானது.

சவால்களுக்கு மத்தியில் வென்றெடுக்கப்பட்ட சமாதானத்தை சீர்குலைப்பதற்கு சில தரப்பினர் பல்வேறு வழிகளில் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

உள்ளக அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் சில நாடுகள் இலங்கைக்கு எதிராக செயற்பட்டுவருகின்றன.

குறிப்பாக தமிழ்ப் புலம்பெயர்ந்த மக்கள் செறிந்து வாழ்ந்து வரும் நாடுகளில் இவ்வாறான அரசியல் இடம்பெற்று வருகின்றமை வழமையானதே.

குறிப்பாக கனடா, பிரித்தானியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் அரசாங்கங்கள் உள்ளக அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டுவருகின்றன.

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்குலக நாடுகளைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் இவ்வாறு புலிகளுக்கு ஆதரவாக செயற்படுகின்றனர்.

இதன் காரணமாகவே இலங்கைக்கு எதிராக சில தரப்பினர் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர்.

பல்வேறு தியாகங்களைச் செய்து ஈட்டப்பட்ட சமாதானத்தை சீர்குலைக்கும் சக்திகள் குறித்து நாம் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டியது அவசியமானது.

உலகின் புவியியல் ரீதியான அரசியல் கள நிலைவரங்களை தொழில்சார் நிபுணர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் காரணமாகவும் சில நாடுகள் நாட்டின் உள்விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றன.

உலகின் பல நாடுகளு[illegible] கொண்டிருக்கும் உறவுகளைப் போன்றே சீனா இலங்கையுடனும் உறவுகளைப் பேணி வருவத[illegible]வும் சில தரப்பினர் இதனைப் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்றாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)


A/L - அரசியல்
2014 ஆரம்பம் ஜனவரி 7
DCM
K.சுகாஷ் (LLB)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் - 07.01.2012
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் மட்டும்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 8.00 - 9.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 - 3.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 10.00 - 11.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 4.00 - 5.00 |

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள்
O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 9.00 - 10.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 3.00 - 4.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 11.00 - 12.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 5.00 - 6.00 |

MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456

உயிரியல் -DAY CLASS
ஆரம்பம்: 06.01.2012 7.00 AM
2012 இற்கான துரித மீட்டல், அலகுகள் ஆரம்பம்
2014 A/L இற்கான English Medium விரைவில்
By: Botany Bala Sir
(7218)
COLLEGE OF CHEMISTRY

A/L 2014
கலை வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00
அனுமதியை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

A/L 2014
கலை வர்த்தகப்பிரிவு
அனுமதியை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்
ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00
NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

யாழ் நகரில் புதிய உதயம்
Jet D Express Courier Service
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விசேட கட்டணச் சலுகை உண்டு
உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய
(அ-5433)





DHL WORLDWIDE EXPRESS Available

UK Over 5Kg - 900/=
Over 10Kg- 650/=
Germany Over 10Kg -700/=
France Over 10Kg - 750/=

எல்லா நாடுகளுக்கும் Over 25kg - 500/= இல் இருந்து மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்
Note : #.கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்
#. வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை, (குனம் ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No.77E, Manning Place, Wellawatta, Colombo 6,
T.P:- 0112363873
0776509909


## சாவகச்சேரி நகர வணிகர்களுக்கான முக்கிய அறிவித்தல்

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றினால் சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தினருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டமையினால் அதனை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட முழு அளவிலான கடையடைப்பு நடவடிக்கையானது,

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. அப்பாத்துரை விநாயகமூர்த்தி, திரு.சிவஞானம் சிறிதரன் ஆகியோரின் சமரச முயற்சியினால் எமது கோரிக்கைகள் சாவகச்சேரி நகரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்து கடையடைப்பு போராட்டம் நிறைவடைந்தது.

ஆகையால் 05.01.2012 ம் திகதி இன்று சகல வணிக நிலையங்களையும் திறந்து சந்தை உட்பட வழமையான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது இந்நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிய வணிகர்கள், சந்தை வியாபாரிகள் அனைவருக்கும் இரு கரம் கூப்பி நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்தோடு சமரச முயற்சியில் ஈடுபட்ட கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதனை ஏற்றுக்கொண்ட சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி.

இப்போராட்டத்தால் நுகர்வோர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மனவருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-5440)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்


இலாபகரமான சமையலை நோக்கி...
- நெருப்பு இல்லை, புகை இல்லை.
- குறைந்த மின்சாரம், விரைவான சமையல்.
- பராமரிப்புச் செலவு அற்றது.
- மிகவும் பாதுகாப்பானது.
- ஒரு நாள் சமையல் செலவு ஒரு அலகு மின்சாரம்.

புதுவருடத்தை முன்னிட்டு AP KITCHEN LAPTOP வழங்கும் மாபெரும் விலைக்கழிவுகளை பெற்றிட இன்றே விரையுங்கள்.

AP KITCHEN LAPTOP™
மின்காந்த அடுப்புக்கள்
05.01.2012 to 14.01.2012 வரை விலைக்கழிவு
aves™ INDUCTION COOKER & KITCHEN APPLIANCES
Mfg : ISO 9001:2008 COMPANY
OFF 2000/= OR FREE
ஒரு வருட உத்தரவாதத்துடன் மேலும் இரண்டு வருட இலவச சேர்விஸ்.







0% Easy Payment for Credit Card Holders
*conditions Apply
No.368/1, Galle Road, Wellawatte, Colombo 06. Tel:011 2364696, 011 4255565 Branch : 124, Palaly Road, Jaffna. Tel: 021 222 4749


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது